## புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலையம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஜனவரி ௴ 11௳ [ந. 26.

பிரஸங்கம் XXVI.

## ஒருவருஷத்திய நீர்மூழ்கி தாக்குதல்.

[குறிப்பு:—அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிப் படையெடுப்பானது மாக்ஷிமை தங்கிய மன்னர் அரசாங்கத்தின் அவஸரமான கவனார்க விஷயங்களில் ஒன்றாக இருக்கிறது. பயமூட்டும் ஸ்வபாவிகள் இந்த விஷயத்தை விரும்புவதால், ஒரு அரசாங்க அறிவிப்பாயில்லாது, விஷயம் தெரிந்த ஒருவரின் அபிப்பிராயமாயிருந்தாலும் கூட, விஷயத்திற்கு மிகவும் பொருத்தமாயிருப்பதால் சென்ற அக்டோபர் மாத "பத்தொன்பதாம் நூற்றாண்டு" என்ற சஞ்சிகையிலிருந்து இந்த வியாசத்தை நமது நடப்பு வாரத் தலையங்கமாகப் பிரசுரிக்கிறோம்].

யுத்தத்தின் 52 வாரங்களில் நடந்த ஸம்பவங்கள் இப்பொழுது பதியப் பெற்றிருப்பதால், இப்போரில் நீர்மூழ்கிகள் செய்திருக்கும் வேலை எம்மட்டுமென்று மதிப்பெடுக்கலாம். நம் வாசற்படிகளிலும், கூரைகள்பேரிலும் நடக்கும் பகிரங்கமான விமான யுத்தத்தில் நம் கவனம் மேலிட்டுவிட்டது. அதனால் நம் யுத்த பிரயத்தனத்தை முறிக்க எதிரி நடத்தும் மற்றொருவிதமான யுத்தத்தை நாம் கவனிக்கவில்லை. மேலும் வியாபாரக் கப்பல் நஷ்டங்களைப் பற்றி சமாசாரங்கள் பிரசுரப்படுத்தப்படாமல் மூடப்படுவதும் ஒரு காரணம். இது விஷயமாய் அதிகாரிகள் சொல்லும் காரணங்களின் நியாயத்தை நாம் சந்தேகமுறுவதும், அதிகாரக் கொள்கையைப்பற்றி நாம் பேதமான அபிப்ராயம் கொள்வதும் அநுமதிக்கத்தக்கதே. ஆனால் அது சம்பந்தமான விதிகளை நாம் மீறக்கூடாது.

ஆகையால் ஜெர்மானிய நீர்மூழ்கி யுத்தத்தைப்பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் ருஜுக்களைவைத்து நாம் விவரிக்கலாம். அனுவசியமான தப்பு அபிப்ருயத்தை விளக்குவதற்காகவே, கிடைத்திருக்கும் ருஜுக்கள் பொய்யல்ல வென்று முதலில் கூறுவேன்.

### நம் யதார்த்த சங்கதிகள்.

பிரதிவாரம் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை எவ்வள வென்றும், மொத்த பாரம் எவ்வளவென்றும் பிரசுரப்படுத்தப்பட்டிருக்கிறதைத் தவிர வேறொன்றுமில்லை. அவைகளெல்லாம் சரியாகயிருக்கின்றன. தாமதமாகப் பின்னால் வந்த செய்திகளிருந்தால் அவைகளைத்தான் சேர்த்துக்கொள்ளவேண்டி யிருக்கும். அதிகாரப்பற்றில்லாதவர்கள் சோதித்ததிலிருந்து கடற் சண்டையில் நேர்ந்த நஷ்டங்களைப்பற்றி அதிகாரவர்க்கத்தின் எண்ணிக்கைகள் சரியென்றே நிச்சயித்தல்வேண்டும். பின்வரும் அதிகாரவர்க்க மதிப்பும், இதர மதிப்புக்கு ஒத்ததாகவேயிருக்கிறது :—

1940-ம் ௵ ஸெப்டம்பர் ௴ 1௳ முடிய :—

| | | |
|---|---|---|
| பிரிடிஷ் நஷ்டம் | ... | 1,539,196 டன்கள். |
| நேசதேசத்தார் | ... | 462,924 ,, |
| நடுநிலைதேசத்தார் | ... | 769,213 ,, |
| | | 2,771,333 டன்கள். |

இதன்படி ஒரு வாரத்திய சராசரி நஷ்டம் 53,295 டன்கள்.

### எதிரியின் மனோராஜ்யம்.

ஜெர்மனி தான் இந்த யுத்தத்தில் நீர்மூழ்கி தாக்குதல்களில் நஷ்டப்படுத்த நினைத்த மதிப்புடன் இவைகளை ஒப்பிட்டால் ஸ்வாரஸ்யமாகயிருக்கும். யுத்த துவக்கத்தில் நடந்த கடல்மேல் வணிகத்தின் முறையையும் அளவையும் ஒட்டிப்பார்த்து முதல் மாதத்திற்குள் 20—லக்ஷம் டன் நிறையுள்ள கப்பல்களை மின்னல்போல் தாக்கி மூழ்கடித்து விடலாமென்று நினைத்தார்கள். அம்மதிப்பும் நாஸிகளுக்கு ஸ்வபாவமாகவுள்ள மனோராஜ்யம்தான். சாத்திர ஆராய்ச்சியின் பேரில் முடிவுக்குவந்த மதிப்பல்ல. எதிர்ப்பையும், பிரதி எதிர்ப்பையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளவில்லை. பிரிடிஷ், ஸ்காண்டினேவியன், டச்சு, பிரஞ்சு கப்பல்காரரின் ஸ்வபாவத்தை அது கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. அம்மதிப்பு ஹிட்லருடைய மனோபீஷ்டம். அவன் ஆக்ஞை. ஆகையால் நடைபெறவேண்டியது. சென்ற யுத்தத்தில் ஜெர்மனி சக்ரவர்த்தியின் நீர்மூழ்கிகள் ஒரு மாதத்தில் 881,000 டன்களை மூழ்கடித்து முதல் பரிசு பெற்றது. அப்பெரிய வேலை இந்த ஜெர்மன் நீர்மூழ்கிகள் இரட்டித்து காட்டவேண்டும். அது ஒரு ஆக்ஞை. அது கேவலம் ஹேளனம் செய்யத்தக்கது என்ற காரணங்களை அந்நாளில் ஒருவரும் ஹிட்லரிடம் சொல்லத் துணியார்கள்.

நீர்மூழ்கி யுத்தத்தைப்பற்றி ஜெர்மன் பத்திரிகைகள் வெளியிடும் சமாசாரங்களைத்தவிர இதர வெளியீடுகளையும் ஹிட்லர் கவனித்தானானால், அவன் தன்னுடைய நீர்மூழ்கிப் படைகளுக்கு இட்ட கடமையின் ஸ்வபாவத்தை அவன் கொஞ்சங்கூட அறியவில்லை என்று அவன் உணர்வான். ஜெர்மானிய அதிகாரவர்க்கச் செய்திகளே அவனுக்கு மனத்திற்குகவாத ஆச்சரியத்தை அளித்திருக்கும். ஏனெனில், மனஞ்சலியாமல் மடுவை மலையாக்கும் டாக்டர் கோயபல்ஸ் உலகத்தில் ஒரு வருஷத்தில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல் பாரத்தை இரட்டித்து 50-லக்ஷம் என்று சொல்லிக்கொள்வதைவிஞ, மேற்கொண்டு சொல்லிக்கொள்ளத் துணியவில்லை. இந்த ஜெர்மன் நீர்மூழ்கி யுத்தத்திற்குப் பொறுப்பாளிகளின் பேரில் ஹிட்லேந்திரனின் வஜ்ராயுதம் விழுந்திருக்கவேண்டுமென்பதைக் காட்டக்கூடிய அறிகுறிகள் இருக்கின்றன. பெர்லின் அதிகார அறிக்கைகளில் சொல்லிக் கொள்ளும் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. 1940ம்-ஹு ஸெப்டம்பர்மீ 1வுயுடன் முடிந்தவாரத்தில் உண்மையில் 84,575 டன்கள் மூழ்கியிருக்க, ஜெர்மானியர் 243,671 டன்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஜெர்மானியத்தலைவர் பெருமானை ஆராதிப்பதற்காக நடப்பை மூன்று பங்கு படுத்திச் சொல்லவேண்டியிருக்கிறது.

[குறிப்பு:—இந்த வியாசம் எழுதியபிறகு நீர்மூழ்கிப் படையெடுப்பு பலமாயிருந்தும்கூட, சென்ற ஜூன் முதல் நவம்பர் வரை மாதாந்திர சராசரி நஷ்டம் 1917-ம் வருஷத்தைவிட 120,000 டன் குறைவு; நவம்பர் மாத நஷ்டம் அக்டோபரைவிட 100,000 டன் குறைவு. டிஸம்பரிலிருந்து இன்னமும் குறைந்துவிட்டது.—Ed.]

கடல் வணிகத்தின்பேரில் ஜெர்மனிசெய்த ஒரு வருஷத்திய யுத்தத்தின் மொத்த மதிப்பு என்னவென்றால், அவர்கள் ஒரு மாதத்தில் செய்வதாகத் திட்டம் போட்டுக்கொண்டதற்குச் சற்று அதிகமாக அவர்கள் ஒரு வருஷமாக நீர்மூழ்கிகள், கடற்கூரங்கங்கள், விமானங்கள் ஆகிய மூன்றுகளால் செய்யமுடிந்ததென்பதுதான். முதல் நான்கு வாரங்களில், வாரம் ஒன்றுக்கு எவ்வளவு மூழ்கடிக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டார்களோ, அதில் பத்தில் ஒரு பங்குதான் ஒரு வருஷத்தில் ஒருவார சராஸரியாகிறது. இதிலிருந்து ஒரு வருஷத்திய போராட்டத்தின் முடிவை அளப்பதற்கு நமக்குஒரு முக்கியமான அளவு கிடைத்திருக்கிறது.

**பவுன், ஷில்லிங், பென்ஸ்.**

இந்தச் சித்திரத்திற்கு மற்றொருபுறமிருக்கிறது. இவ்வளவு டன்களை மூழ்கடிக்க ஜெர்மானியர்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? இது விஷயத்தில் நாமாக ஊகிக்கவேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். ஏனெனில் ஜெர்மானிய நீர்மூழ்கிகளின் நஷ்டம் பிரசுரப்படுத்தப்படவில்லை, பொறுப்பு வாய்ந்த மந்திரிகள் பார்லிமெண்டில் சொல்லிய வார்த்தைகளிலிருந்து யுத்தத்தின் முதல் மூன்று மாதங்களில் ஜெர்மன் நீர்மூழ்கி அணிகள் தலையெடுக்கமுடியாவண்ணம் தோற்கடிக்கப்பட்டனவென்றும், எவ்வாறு பிரிடிஷ் விமானம் ஒரு நாளைக்கு 150 முதல் 180 வரை எதிரி விமானங்களை வீழ்த்தினவோ அந்தப் பராக்கிரமத்திற்கு ஒப்பிடத்தக்கப் பெருஞ்செயலென்றும் நமக்குத் தெரிகிறது.

ஆகஸ்டு மீ 10உயிலிருந்து ஸெப்டம்பர் மீ 10உவரை 1,466 ஜெர்மன் விமானங்களையும், 3,600 ஜெர்மன் விமானிகளையும் சேதப்படுத்தியிருக்கிறோம் என்று தெரிகிறது. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களில் அறுபதும், பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்களில் 2,500ம் இழந்திருக்கிறார்கள் என்று வெளியிடப்பட்ட சமாசாரங்களிலிருந்து தெரிகிறது. விமானங்கள், நீர்மூழ்கிகள் இவைகளை இழந்ததால் ஜெர்மனிக்கு ஏற்பட்ட முதல் நஷ்டம் சுமார் 150 லக்ஷம் பவுன்கள் என்ற ஸ்வாரஸ்யமான விஷயமும் கவனிக்கத்தக்கதே.

ஜாக்கிரதைப் பிரசுரம்.

விமானப் போர்கள் வெட்டவெளியில் நடப்பதால் எதிரிக்கு நேர்ந்த நஷ்டத்தை தினசரி கணக்கிட முடியும். கடலுக்குள் நடக்கும் எதிர்ப்பும் பிரதி எதிர்ப்பும் ரஹஸ்யமாகயிருப்பதால் முடிவுகளைப் பற்றியும் நாம் மௌனம் ஸாதிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் பிரிடிஷ் நீர்ப்படை அவர்களை எதிர்த்த ரஹஸ்ய எதிரியான நீர் மூழ்கியின் பேரில் பெற்ற பெரும் வெற்றியை உலகம் அறிந்து ஆமோதிக்க முடியவில்லை. எதிரியின் ஒவ்வொரு நீர் மூழ்கியின் அழிவைப் பற்றியும் வழக்கமாக அறிக்கைகள் பிரசுரம் செய்யப்பட்டு வந்தால் அவைகளின் விரசும் எதிரி விமானங்களின் நஷ்டங்களைப்பற்றி நாம் விளம்பரம் செய்யும் விமரிசையான விரசுகள்போல மனதிற்கு ஊக்கத்தை அளிக்கும். வெகு அபூர்வமான அறிய செயல்கள் நடந்தால் அல்லாது, (உதாரணமாக ஒரே நாளில் மூன்று எதிரி நீர்மூழ்கிகள் மூழ்கடிக்கப்பட்டன என்ற சங்கதியை பிரசுரம் செய்தார்கள்) மற்றபடி நம்முடைய கப்பற்படை எவ்வளவு கோரமாகத் தாக்கி எவ்வளவு பராக்கிரமச் செயல்கள் செய்திருக்கின்றன வென்பதைப்பற்றி வெகு கோரமான மௌனத்தை நம் கடற்படை இலாகா சாதிக்கிறது. முக்கியமாக சென்ற 3 மாதங்களாக ஹிட்லர் பிரிடன் தேசத்தை பரிபூர்ணமாக முற்றுகை போடவேண்டும் என்று செய்துகொண்ட வீண் பெருமைக்காக அவனால் புதிதாக கட்டப்பட்டு அனுப்பப்பட்ட நீர்மூழ்கி அணிகளின்பேரில் நாம் செய்த போரைப் பற்றி வெகு உறுதியான மௌனம் சாதிக்கப்பட்டிருக்கிறது. ஹிட்லர் போட்டுக் கொண்ட சபதமும் இங்கிலாந்தில் உள்ளவர்களுக்கு ஆகாரத்திற்காக செல்லும் சாமான்களையும் தொழிற்சாலைகளுக்கு செல்லும் ஏராளமான சரக்குகளையும் நிறுத்த முடியவில்லை. சுமார் 16 வாரங்களுக்குள் யாதொரு எதிரி நீர்மூழ்கியையும் மூழ்கடிக்கப்பட்டதாக அதிகார பூர்வமாக யாதொரு பிரசுரமும் வெளியிடப்படவில்லை என்பதை வழக்கமாக கடல் யுத்தத்தைப் பற்றி பரிசீலனை செய்யாதவர்கள் சற்று ஆச்சரியத்துடன் அறிவார்கள். எதிரியின் தோணி வெடியால் மூழ்கடிக்கப்பட்ட கப்பலைச் சேர்ந்த மாலுமி ஒருவன் எதிரியும் மூழ்கடிக்கப்பட்டான் என்று தற்செயலாக ஒரு வார்த்தை சொன்னால் அதன் உண்மைக்கு உத்தரவாதம் இல்லை என்று நினைத்து தோஷதரிசிகள் தள்ளி விடுவார்கள். ஏனெனில் அதை ஏற்றுக்கொள்வது தோஷதர்சன இலாகாவின் வேலையல்ல. ஒரு கனடா நாசகாரியின் மாலுமிகள் கீழ் அட்லாண்டிக் மஹாசமுத்திரத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஆறு நீர் மூழ்கிகளை நாசம் செய்து விட்டதாக

அவர்கள் சொல்லிக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. அதிகார முறையில் வெளியிடப்படும் கைதிகள் ஜாபிதாவில் ஏதாவது ஒரு சமயம் ஒரு ஜெர்மானிய மாலுமி அல்லது ஒரு கடற்படை உத்யோகஸ்தரின் பெயர் வெளிவருகிறது. அதைத்தவிற, கடற்படை இலாகாவுக்கு வெளியே ஒருவருக்கும் யாதொரு தகவலும் தெரியாது.

**மனப்பான்மை.**

இம்மாதிரியான செய்திகளை ஜனங்களுக்கு வெளியிட்டால் உத்ஸாக முண்டாகும் என்றும் ஆகையால் இந்த ரஹஸ்யம் கண்டிக்கத்தக்கது என்றும் சிலர் அபிப்ருயப்படுகிருர்கள். ஆனுல் இந்த யுத்தத்திலும, 1914-ம்வருஷத்திலும் அநுபவ பூர்வமாக நாம் தெரிந்து கொண்டிருப்பது ஒன்று உண்டு. அதாவது நம் பொதுஜனங்கள் செய்திகளைத் தெரிந்துகொண்டு தைரியப்படுவதால் ஏற்படும் நன்மையைக் காட்டிலும் எதிரிகளுக்கு தங்களுடைய நீர்மூழ்கிகளைப்பற்றி யாதொரு தகவலும் கிடைக்காததிலிருந்து அவர்களுக்கு தைரியக் குறைவிலிருந்தும், பயத்திலிருந்தும் நமக்கு ஏற்படக்கூடிய நன்மை அதிகமாக யிருக்கிறது. பிரிடன் தேசத்திலுள்ளவர்கள் தங்கள் கடற்படை சரியாகத்தானிருக்கிறதென்றும், அது எவ்வளவு மௌனமாகயிருந்தாலும், தன்வேலையைச் செய்து கொண்டுதானிருக்கிறதென்றும் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். ஜெர்மன் நீர்மூழ்கிகள் பேரில் நம் கடற்படை செய்யும் யுத்தத்தில் நம் கடற்படை இலாகாவின் பேரில் பொதுஜனம் கொண்டிருக்கும் நம்பிக்கை உசிதமே. சென்ற வருஷம் மேமீ முடிவிலிருந்து ஸெப்டம்பர்மீ துவக்கம் வரையிலுள்ள பதினைந்து வாரங்களில் பிரிடனுக்கும், நேசதேசங்களுக்கும், நடுநிலை தேசங்களுக்கும் ஏற்பட்ட கப்பல் சேதமானது யுத்தத்தின் மற்ற காலங்களைக்காட்டிலும், அதிகமாகயிருப்பினும், அவைகளின் வார ஸராஸரியானது 100,000 டன்கள் வரை ஆகவில்லை. இந்த காலம்தான் எதிரியின் பிரயத்தனத்தின் வெகு தீவிரமானகாலம். எதிரி நீர்மூழ்கியின் தாக்குதலுக்கு ஆதரவாக விசாலமான சுரங்கவெளிகள் கடலில் ஏற்படுத்தினர்கள். விமான தாக்குதலால் பாருவுடன் போகும் வியாபாரக் கப்பல்களையும் தாக்கினர்கள். இம்மாதிரியான பலவிதமான தாக்குகளின் ஒவ்வொன்ருலும் ஏற்பட்ட நஷ்டங்களின் பரஸ்பர தாரதம்யம் தெரியவில்லை. அது விஷயமாகவும் முடிந்தவரை எதிரிக்கு ஒன்றும் தெரியாமல் வைத்திருப்பதே நலம் என்று நம் கடற்படை இலாகா தீர்மானித்து இருக்கிறது. ஆயினும் கிடைத்திருக்கும் எல்லா தகவல்களிலிருந்து ஒரு முடிவுக்கேனும் வரக்கூடியதாக இருக்கின்றது. அதாவது பிரதிவாரம் அதிகரித்துக் கொண்டிருந்த நஷ்ட எண்ணிக்கைகளுக்கு விமான தாக்குதல் வெகுசிறிய அளவுதான் காரணம் என்பதே.

**பயங்கரமான இதாலிய நீர்மூழ்கிகள்.**

இதாலிய நீர்மூழ்கி படையெடுப்பு, ஜெர்மன் நீர்மூழ்கி படையெடுப்பின் முதல் வாரங்களின் போன்றதே. சில இதாலிய அறிக்கைகளில் அவர்களின் நீர்மூழ்கி கலன்கள் அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் சில டன்கள் மூழ்கடித்து விட்டு அவர்களுடைய சஞ்சாரத்திலிருந்து திரும்பி வந்தன என்று கூறப்படுகிறது.

அவர்கள் சொல்லும் அளவுக்கு நஷ்டம் ஏற்படாவிடினும் ஏதோ சொல்பமாவது அவைகள் செய்தனவென்று நாம் நினைக்கத்தக்கதே. ஜெர்மானிய நீர்மூழ்கி கலன்களுக்கு ஆதியில் புறப்படும் ஸ்தானங்களாக இருந்த இடங்களிலிருந்து அந்த நீர்மூழ்கிகள் எவ்வளவு செய்ததோ அதைப்போல இதாலிய புறப்படும் ஸ்தானங்களிலிந்து போர்ச்சுகீஸ் கரையில் இதாலிய நீர்மூழ்கிகள் வேலை செய்திருக்கக்கூடும். கடலின் கீழ் கலன்கள் ஜிப்ரால்டர் ஜல சந்தியைக்கடக்க முடியாதபடி செய்யமுடியாது. ஆனால் கடப்பதை அபாயகரமாகச் செய்யலாம். மத்தியதரைக் கடலில் இருக்கும் பிரிடிஷ் அதிகார இலாகாவும் எவ்வளவு இதாலிய நீர்மூழ்கிகள் சேதம் செய்யப்பட்டது என்று பல அறிக்கைகளை விடுத்திருக்கிறார்கள். சில அதிகாரப்பற்றற்ற அறிக்கைகளையும் தோஷதர்சன இலாகா, வெளியிட அனுமதித்து இருக்கிறது. அதனால் இதாலிய நீர்மூழ்கி படையெடுப்பின் முதல் 9 வாரங்களில் இதாலியர்களுக்கு 17 முதல் 19 கலன்கள் சேதமாயின என்று நிரூபிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையை சென்ற பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் ஜெர்மானிய நீர்மூழ்கிகளின் சேதத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் "ஒரு வாரத்திற்கு இரண்டு முதல் நான்கு சேதமாயின என்று பாமர சபையில் திரு. சர்ச்சில் அவர்கள் சொன்னார்கள்." நம் கடற்படை இலாகா நீர்மூழ்கிகளை கண்டுபிடித்து அழிப்பதற்காக எடுத்துக்கொண்டிருக்கும் உபாயங்கள் அச்சுக் கூட்டாளிகளின் பெரிய கூட்டாளியின் பேரில் எவ்வளவு நாசகரமாக இருக்கின்றதோ அது போலவே சிறிய கூட்டாளிகளின் பேரில் இருக்கின்றது என்று தெரியும். நேச தேசங்களின் உபயோகத்திற்காக மத்தியதரைக்கடலில் வியாபார கப்பல் கூட்டங்கள் செல்லவில்லையாதலால் இதாலிய நீர்மூழ்கிகள் குறிகளை தேடிக்கொண்டு வெகுதூரம் வெளியில் திரியவேண்டியிருக்கிறது. செங்கடலிலும் இந்திய சமுத்திரத்திலும் நம் கடல் போக்குவரத்தைத் தடுப்பதற்குச் செய்யப்பட்ட இதாலிய பிரயத்தனத்தால் இதாலியர்களுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது என்று மத்திய கிழக்குப் பிரதேசங்களிலிருந்து வந்த அர்ஜிகளிலிருந்து தெரிகிறது. ஸெப்டம்பர் மாத துவக்கத்தில் அக்கடல்களில் உபயோகத்திற்காக இதாலி யுத்தத்துக்கு தயாராக சேகரித்து வைத்திருந்த நீர்மூழ்கி கலன்களில் 3 தான் மீதப்பட்டனவென்று அதிகாரப்பற்றற்ற வட்டாங்களிலிருந்து தெரிகிறது. மத்தியதரைக்கடலில் அதன் இரண்டாயிரம் மைல் நீளத்தில் நடந்த ராணுவ போக்குவரத்தில், அதாவது ஜிப்ரால்டரிலிருந்து அலெக்ஸாண்டிரியா வரையில், யாதொரு நஷ்டமும் ஏற்படவில்லை என்று மத்திய தரை சர்வசேனாதிபதியின் அறிக்கைகள் வெளியிடுவது கவனிக்கத்தக்கது.

**நம் சொந்த நீர்மூழ்கிகள்.**

கடலின்கீழ் வேலை எதிரி கலன்களுடையதுமட்டுமல்ல. ஜெர்மானியர் சிரமத்துடன் செய்ய முயலும் கடல்மேல் வணிகத்தை ஒரு சீராக பிரிடிஷ் நீர்மூழ்கிகள் அமுக்கிக்கொண்டே வருகின்றன. நார்வேயில் வியாபித்திருக்கும் ஜெர்மானிய சேனைக்கு ஸப்ளை செய்யும் கலங்களை முக்கியமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறோம். வட ஆபிரிகாவிற்கு இதாலியிலிருந்து செல்லும் ஸப்ளைகளையும் அவ்வாறே தாக்கிக்கொண்டிருக்கிறோம். ஏராளமான சரக்கு கப்பல்களையும் ஸப்ளைக் கப்பல்

களையும் மூழ்கடித்திருக்கிறோம். நமக்கு நேர்ந்திருக்கும் நீர்மூழ்கி நஷ்டங்களை நோக்குமளவில் நீர்மூழ்கி எதிர்ப்பு உபாயங்கள் நம்மிடம்மட்டும் இருப்பதாக நினைக்கக்கூடாதென்று தெரியும். வடகடலிலும் மத்தியதரைக் கடலிலும் எதிரியின் தாக்குதலால் நாம் பதினைந்து கலங்களை இழந்திருக்கிறோம். விபத்தினால் ஒன்றை இழந்தோம். பராக்கிரமும், அழியாப் புகழ் பெற்ற "ஆர்ஸல்" என்ற நீர்மூழ்கியை போலந்து இழந்தது. நியாயமாக தாக்கக்கூடிய குறிகளான யுத்தக் கப்பல்கள், ஸர்பராக்கலங்கள் இவைகளை தாக்கியதில் இந்த நஷ்டங்கள் நேர்ந்தன. யுத்த காலத்தில் நீர்மூழ்கிகளின் காரியங்களை கவனிக்கப்போகிய ருஜுக்கள் அதிகரிக்க, அதிகரிக்க உலக கடற்படைகள் எவ்வளவு எளிதில் நாசமாகக்கூடிய ஒரு கருவியைச் செய்திருக்கிறார்கள் என்றும், அவை உலக சம்பவங்களின் வழியை எவ்வளவு சிறிதாக மாற்றவல்லவை என்றும் தெளிவாய் விளங்கும். வெகு அபூர்வமாக நேரக்கூடியதும், திடுக்கிடச் செய்யக்கூடியதுமான வெற்றிகளைத் தவிர—உதாரணமாக பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள் "கரேஜஸ்" "ராயல் ஓக்" என்பவைகளை மூழ்கடித்ததைச் சொல்லலாம்—இரு பக்கங்களிலும் நடந்துவரும் நியாயமான யுத்த நடவடிக்கைகளில் எவ்வித மாறுதலையும் நீர்மூழ்கி யுத்தம் உண்டாக்க முடியாது. முப்பது வருஷங்களுக்குமுன் நீர்மூழ்கியின் பலமும் பரீக்ஷிக்கப்படாமலிருந்தகாலத்தில், பலர் அது வெகு அபாயகரமானதென்று பயந்துகொண்டிருந்தபோது எழுதப்பட்ட கடற்படை கிரந்தங்களை இப்பொழுது படித்தால் விசித்திரமாகயிருக்கிறது.

**பழய ஊஹங்கள்.**

அவைகளில் சொல்லப்படும் ஊஹங்களை இந்த இரண்டு மகா யுத்தங்களில் கிடைத்த அனுபவத்தை ஒட்டி நோக்குங்கால் அவைகள் எவ்வளவு நகைப்புக்கிடமாகயிருக்கின்றனவென்று விளங்கும். "16 முதல் 20 தோணி வெடிகளை மொத்தமாகக்கொண்ட 4 அல்லது 5 நீர்மூழ்கிகள் முதல் அடியாக அந்தத் தோணி வெடிகளை விடுத்தால், கடல் பரப்பில் மிதக்கும் 6, 7 கப்பல்களுக்கு ஸமானமாகயிருக்கும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. சுத்த சாஸ்திர பரிசீலனை செய்யும் ஒரு கிரந்தத்தில் சுமார் 25 வருஷங்களுக்கு முன் வெளியிடப்பட்ட அபிப்பிராயத்தின் உதாரணமாகக் கொள்ளலாம். நாசகாரிகளைப் போல் நீர்மூழ்கிகளும் அணிகளாகச் சென்று ஒருமுகமாக ஒரு உபாயத்தைச்செய்துமுடிக்க முடியும் என்று அக்காலத்தில் நினைக்கப்பட்டது. 1914-ம் வருஷத்தில் யுத்த நிலையில் அந்த கொள்கைகள் எல்லாம் ஏட்டுச் சுரைக்காய்களாயின. ஒவ்வொரு நீர்மூழ்கியும் தனிக்காட்டு மிருகமாக ஸஞ்சரிக்கவேண்டுமென்பது நிதர்சனமாயிற்று. 1916-ம்ஸூ ஆகஸ்டு மாதத்தில் செய்ததுபோல் முன்னாடியே நீர்மூழ்கிகளை குறிப்பிட்ட வரிசைகளில் நிறுத்தி எதிரி வரக்கூடியதாக எதிர்பார்க்கப்படும் வழியை மறித்துமடக்க உபயோகப்படுத்தப்பட்ட காலத்தில்கூட, அவை யாதொரு பெரிய நஷ்டத்தையுண்டுபண்ணுவதோடுங்கூட பொதுவான யுத்த தந்திரநிலையையும் மாற்றமுடியவில்லை. ஜட்லாந்துக்குப் பிறகு ஜெர்மானிய கடற்படை பின்வாங்கும் பாதையில் நம்முடைய நீர்மூழ்கிகள் வைக்கப்பட்டாலும், என்ன நடந்துகொண்டிருந்தது என்று அவர்களுக்குத் தெரிய

வில்லை. பொதுவாக அவர்களுக்கு அளிக்கப்பட்ட கட்டளைகளின்படி அவர்கள் நடந்துவந்ததால், அவர்கள் ஜெர்மானிய கடற்படை ஷீயருடைய சதுரவ்யூஹங்கள் துறைமுகம் சேரும் வழியில் நம் நீர்மூழ்கிகள் தாக்குவார்கள் என்று எதிர் பார்த்தபடி அவர்கள் செய்யவில்லை.

**வீண் பரீக்ஷைகள்.**

சிற்ப சாஸ்திரிகளால் இன்னும் பெரிதானதும், சக்தியுள்ளதுமான நீர்மூழ்கிகளைசெய்ய முயற்சியெடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு கடற்படையிலும் அம்முயற்சி வீணாகிவருகிறது. ஏனெனில், அதன் பருமனையும், சக்தியையும் வளர்க்கச்செய்யும் உபாயங்களால் அதன் முக்கியமான ஒரு தந்திரம் குறைந்து விடுகிறது. அதனால் அதன் உபயோகமும் குறைந்துவிடுகிறது. அதாவது எதிரி கண்டு பிடிப்பதற்காவது அல்லது தாக்குவதற்காவதுமுன் அதிசீக்கிரமாக மூழ்கிமறையும் சக்தியானது குறைந்துவிடுகிறது. பிரிடிஷ் K. வகுப்பு நீர்மூழ்கிகள் முக்கிய கடற்படையுடன் சேர்ந்து உழைப்பதற்காகச் செய்யப்பட்டன. அவை கடல்மேல் நீராவியால் ஒரு மணிக்கு 25 மைல் செல்லும். அவை உபயோகமற்ற உபாயமாக முடிந்தன. நினைத்தபடி அவை ஒத்துழைக்க முடியவில்லை. 12 அங்குலம் உள்ள பீரங்கிகளையும், விமானங்கள் தொங்குவதற்கான வசதிகளையும், இன்னும் பல விசித்திரமான சூக்ஷமங்களுள்ள M. வகுப்பு நீர்மூழ்கிகளைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஒரு பெரும் வெள்ளையானையாக முடிந்த X. 1. என்ற ராக்ஷஸ நீர்மூழ்கியைச் செய்யவும், பிரிக்கவும் மறுபடி செய்யவும் மறுபடி மாற்றவும் சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிடப்பட்டது. அதை யுத்தப் படையின் ஒரு பாகமாகக்கூடச் சேர்க்கவில்லை. பிரஞ்சு ராக்ஷஸ நீர்மூழ்கியான "ஸர்கூப்" என்பதைப்பற்றி பிரஞ்சுக்காரர்களின் அபிப்ராயத்தை நாம் வாயில் வழங்கமுடியாத சொற்களால் விவரித்திருக்கிறார்கள். பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் திட்டம் போடப்பட்ட 2,000 டன் கனமுள்ள நீர்மூழ்கியும் கைவிடப் பட்டு சென்ற இரண்டு வருஷமாக ஏற்படும் திட்டங்களில் சிறிய நீர்மூழ்கிகளையே ஜப்பானியர் விரும்புகிறார்கள் என்று ஜப்பானிய கடற்படையை சூழ்ந்துகொண்டு இருக்கும் பரமரகஸ்யத்தின் ஊடேகூடத் தெரிகிறது.

இவ்வாறு வெகு நஷ்டத்தை யுண்டுபண்ணக்கூடிய நியாயமான ஆயுதமாக நீர்மூழ்கி உபயோகப்பட ஸம்பாவிதமில்லை யென்றால், வியாபாரத்தை வழிமறிக்கும் கொள்ளைக்காரனாக யிருக்கமுடியவில்லை யென்றால், நீர்மூழ்கியின் உபயோகம் தான் என்ன? சென்ற மகாயுத்தம் முடிந்ததிலிருந்து இக்கேள்வியை பிரிடிஷ் கடற் படை ஒவ்வொரு கடற்படை மகாநாட்டிலும் கேட்டுக்கொண்டுவருகிறது. சாஸ்திர பரிசீலனையின்பேரில் அக்கேள்விக்கு பதில் சொல்வதென்றால் "சிறிய அரசுகளின் கடற்கறை ரக்ஷணத்திற்கு அது உபயோகப்படும்" என்று சொல்லலாம். இந்த நோக்கத்தை வல்லரசுகள் கொண்டால் அது வெகு பரிவுதலும், சுயநலமற்றதுமே. ஆனால் அது அவ்வளவு திருப்திகரமாக இராது. நீர்மூழ்கிகளை ஒழிக்காததற்குகாரணம், பிரிடன் அவை ஒழியக்கூடாதென்பதற்கு காரணங்காட்டினதால் தான். நம் கக்ஷிக்கு ஆதாரமாக சென்ற வருஷத்தில் இன்னும் சிலகாரணங்களையும் காட்டியிருக்கிறோம்.

# வார யுத்தச் செய்திகள்.

(2—1—41 லிருந்து 8—1—41 வரை).

## புது வருஷம்.

கஷ்டங்களெல்லாம் பழய வருஷத்தோடு போகட்டும். புது வருஷத்தில் வெற்றியும் அமைதியும், நல்லெண்ணமும் உண்டாகட்டும். நாஸிகளுடையவும், பாஸிஸ்ட்டுகளுடையவும் கொடுங்கோல் ஒழியட்டும், ஸ்வதந்திரமும், நேயமும் அடங்கிய புது சகாப்தம் ஏற்படட்டும். எவ்விதம் இந்த வருஷ ஆரம்பத்தில் இதாலியின் பேராசை ஒழிந்ததோ அதே மாதிரி சீக்கிரம் இதே வருஷத்தில் மேற்கு ஐரோப்பாவில் நாஸிகளின் ஆசையும் அழிந்து, பிரிடன் வெற்றியை அடைந்து, ஐரோப்பாவையும், உலகத்தையும் யுத்த பயங்கரத்திலிருந்து விடு விக்கட்டும். இதுவே நம்முடைய புதுவருஷக் கோரிக்கையாகும்.

## பார்டியா பிடிபட்டுவிட்டது.

சனிக்கிழமை மாலை பார்டியா பிடிபட்டு விட்டது. அப்பொழுது அங்கிருந்த சைன்யம் சரணாகதி யடைய, இதாலியக் கொடியும் சர்க்கார் கட்டடத்திலிருந்து இறக்கப்பட்டது. இதாலியர்கள் இந்த இடத்தை நாலு வருஷகாலமாகப் பலப் படுத்தி வந்தார்கள். அதைப் பாதுகாக்க 20,000 சிப்பாய்களும் இருந்தார்கள். 18 நாட்களாக எதிர்த்தும் ஒன்றும் முடியவில்லை. முடிவில் பலமாகத் தாக்கப் பட்டு, இரண்டு நாட்களுக்குள்ளாகப் பிடிபட்டுவிட்டது. முன்னணியில் நின்று போர் செய்யும் பெருமை ஆஸ்திரேலியர்களுக்கேற்பட்டது.

நிலப்படையானது, கப்பற் படையோடும், விமானப் படையோடும் கலந்து கொண்டு சண்டை செய்து வெற்றியடைந்ததற்கு, பார்டியாச் சண்டை ஒரு பெரிய உதாரணமாகும். ஏற்கனவே போட்ட திட்டப்படி சண்டை செய்யப்பட்டு வெற்றி கிடைத்தது.

டைம்ஸ் பத்திரிகை சொல்லுகிறபடி வெற்றிக்கு அடையாளம் நம்முடைய யுத்த—நோக்கங்கள் கைகூடுவதும், எதிரியின் நோக்கம் பலிக்காமல் போவதும் தான். இந்த விதமாகப் பார்த்தால் பார்டியா—வெற்றியிலிருந்து பிரிடன் எகிப்தைக் காப்பாற்றிவிட்டது. இதாலிக்கு லிபியாவிலும் அபிஸீனியாவிலும் ஆதிபத்தியம் குறைந்துவிட்டது. சைன்யத்திலும், தளவாடங்களிலும் இதாலியருக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்துக்களவில்லை.

பார்டியா உள்பட, இதாலிய நஷ்டம் மொத்தத்தில் 70,000 பேர்களாகும்.

ஆனால் லிபியா யுத்தம் இன்னும் முடிந்துபோகவில்லை. பார்டியாவைப் பிடித்துக்கொண்டு பிரிடிஷ் சைன்யங்கள் டொப்ருக்கைப் பிடிக்க முன்செல்லு கின்றன. டொப்ருக்கானது கப்பற்—படைக்கும், விமானங்களுக்கும் கட்டப்பட்ட பெரிய நிலயம். எல்லைப்புறத்திலிருந்து 100 மைல் உள்ளே தள்ளியிருக்கிறது.

அதைச் சுற்றி இரண்டு பலமான வேலிகள் போடப்பட்டிருக்கின்றன. இருந்த போதிலும் இந்த இடமும் பிடிபட்டுவிடும். இதாலியர்கள் தைர்யத்தை இழந்து விட்டதால், வரும் மார்க்கத்திலும் சரி, டோப்ருக்கிலும் சரி அதிகச் சண்டை ஏற்படாது. ஒரு வாரத்தில் பிடிபடலாமென்று ஒரு ராணுவ—நிருபர் அபிப்பிராயம் கொடுக்கிறார்.

## இதாலியின் கதி.

ஜெர்மன் விமானப்படையின் ஒரு பகுதியானது இதாலிக்குள் வந்துவிட்டதாகவும், மத்தியதரைப் போரில் இது கலந்துகொள்ளுமென்றும், உத்தியோக பூர்வமாக இதாலிய அறிக்கை வெளியாயிருக்கிறது. யோசனைகள் சொல்ல ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும் வந்திருக்கிறார்களாம். என்ன அவமானம். ஜெர்மானியர்கள் இதாலிக்கு பரம்பரையாக, தொன்றுதொட்டு, விரோதிகள். இனி ரகஸிய போலீஸும் வந்து விடும்.

ஏற்கனவே, பிரிடனை எதிர்க்க ஜெர்மனிக்கு உதவியாக இதாலிய விமானங்கள் அனுப்பப்பட்டதற்குப் பிரதியாக இப்பொழுது ஜெர்மன் விமானங்கள் இதாலிக்கு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இதோடு ஜெர்மனியின் சகாயத்துக்கு அனுப்பியிருந்த விமானங்கள் திருப்பிக்கொண்டு வந்தாய்விட்டதென்றும், சொல்லுவதிலிருந்து மேற்சொன்ன காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாயில்லை.

இனி படோக்ளியோவுக்குச் செல்வாக்கு அதிகப்படுமென்பதற்கு சூசனைகள் பலமாய்க் காணப்படுகின்றன. க்ரேக்கிய யுத்தத்துக்கு பலமான சைன்யங்களைத் திரட்டவேண்டுமென்று படோக்ளியோ சொல்லியும்கூட முஸோலினி அவர் வார்த்தையை மதியாது, கிரேக்கியர்கள் பேருக்குத்தான் சண்டை செய்வார்கள் என்று நினைத்து வேண்டியதற்கு நாலில் ஒரு பங்கு சைன்யத்தை மட்டும் அனுப்பித் தோல்வியடைந்தாரென்றும், இதற்கெல்லாம் துர்மந்திரியாயிருந்த கவுண்ட் சியானோவுக்கு இப்பொழுது அவமானமேற்பட்டுவிட்டதாயும் சொல்லப்படுகிறது.

## இதாலிய-கிரேக்கிய யுத்தம்.

இது இப்பொழுது அல்பேனியாவில் நடக்கிறது. வலோனா துறைமுகத்தை இழக்காமல் தடுக்க, அல்பேனியாவுக்குக் குறுக்கே இதாலியர்கள் சில இடங்களைப் பலப்படுத்தி வருகிறார்கள். ஆனால் க்ரேக்கியர்களைத் திருப்பி எதிர்க்கச் செய்யும் யத்தனங்களொன்றும் பலிக்கவில்லை. டிஸம்பர் 31-ல் கிளிஸூரா பார்சத்தில் பலமான சண்டை நடந்தது. ஜனவரி 2-ல் பிரிடிஷ் விமானங்கள் எல்பாஸனைத் தாக்கின. க்ரேக்கியர்களும் அன்று பென்ஸா நதியைக் கடந்து டெபௌனியிலிருந்து வலோனாவுக்குப் போகும் ரஸ்தாவைப் பிடிக்கப் பார்த்தார்கள். பனிக்கட்டி உறைவதற்கும் கீழ் 25 டிகிரிக்குளிரிருந்தும் க்ரேக்க சைன்யமானது ஷ்கும்பி நாட்டில் இடங்களைப் பிடித்துக்கொண்டு முன்னேறுகிறது. கிரேக்கர்கள் கிளிஸூராவைப் பிடித்துவிட்டதாக இப்பொழுது தகவல் கிடைத்திருக்கிறது.

## பிரான்ஸ்.

'மேல் நாட்டு நாகரீகத்துக்கு பிரான்ஸ் அவசியமானது; பிரான்ஸில்லாது இந்த நாகரீகம் நிலைக்காதென்று' மார்ஷல் பிடேன் புது வருஷப் பிறப்பு தினத்தன்று எடுத்துரைத்தார். 'பிரான்ஸானது காயப்பட்டிருந்தாலும் விட்டு விடாதென்று' அன்று பிரெஞ்சு யுத்த மந்திரியாகிய ஜெனரல் ஹண்ட்ஸிகர் பேசினர். பிரெஞ்சு தூரக்கிழ் பிரதேசக் குடியேற்ற நாடுகளைக் காப்பாற்ற பிரான்ஸ் திடமனம் கொண்டிருக்கிறதென்று பிரெஞ்சு லா டேம்ஸ் பத்திரிகை எழுதியிருக்கிறது.

டூலோனிலிருந்த நாசகாரிகளையும், நீர்மூழ்கிகளையும் பைஸர்டா, ஓரான், காஸாபிளான்கா, டாகார் முதலிய ஆபிரிக்கத் துறைமுகங்களுக்கு பிரான்ஸ் அனுப்பிவிட்டதாகப் பிரஸ்தாபம். ஆனால் நிச்சயமான தகவல் இல்லை.

பிடேனுக்குக் கிழ், டார்லான், ஹன்டஸிகர், பிளான்டின் அடங்கிய உள் சபையொன்று அமைக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. ஆனால் இந்த மாதிரியான யோசனைகள் செய்யப்படவில்லையென்றும் மறுக்கப்பட்டிருக்கிறது.

மான்ட் ஸீனிஸ் ரயில் பாதை வழியாக நிலக்கரி முதலிய சாமான்களை இதாலிக்குக் கொண்டுபோக வழிவிட ஜெர்மானியர்கள் விஷி அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிடேனுடைய பதிலென்னவென்று தெரியவில்லை. இந்தப் பாதையானது மலைகளைக் குடைந்து, $7\frac{1}{2}$ மைல் தூரம் ஓடுகிறது. இதாலிக்குப் போக இது குறுக்குப்பாதைதான். இங்கு குளிரால் தடையேற்படாது. இதாலிக்குப் போக மற்றொரு ரயில் பாதை பிரென்னர் கணவாயில் போடப்பட்டிருக்கிறது. இது செங்குத்தான வழியாதலால் வண்டிகள் வேகமாய்ப் போக முடியாது.

பிடேன் கவர்ன்மெண்டில் ஸ்டேட் காரியதரிசியாக வேலைபார்த்த எம்-படுயின், சொந்தக்காரணத்தை முன்னிட்டென்று சொல்லி வேலையை ராஜீனமா செய்துவிட்டார்.

## அமெரிக்கா.

'குடும்பப்பேச்சு' என்று சொல்லி டிஸம்பர் 30 தேதி பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் செய்த பிரஸங்கத்தின் சில பாகங்கள் இன்னும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் ஒரு பாகம் பின்வருமாறு:—'உங்களுடைய க்ஷேமத்தையும், ஸந்ததிகள் க்ஷேமத்தையும் கோரி, அவர்களும், நீங்களும், அமெரிக்காவைக் காப்பாற்ற, யுத்தத்தில் இனி இறங்காதிருப்பதற்காகவே நான் இப்பொழுது உங்களுக்கு எச்சரிக்கை கொடுக்கிறேன். பிரிடன் தோற்றுவிட்டால் இனி நீங்களே யுத்தம் செய்யவேண்டிவரும். ஜேம்ஸ்டவுன், ப்ளைமவுத்ராக் என்ற ஆபத்துக்களுக்குப் பிறகு இம்மாதிரி அபாயம் இது வரையில் நமக்கு ஏற்படவில்லை. ஜெர்மனியிலிருப்பவர்களின் மனதையும், வாழ்வையும் அடிமைப்படுத்துவதோடு நில்லாமல் நாஸிகள் ஐரோப்பாவை ஜயித்து, அங்கிருக்கும் ஐச்வரியத்தைக்கொண்டு உலகத்தையே அபகரிக்க நினைக்கிறார்கள்

பிரிடனுக்கு உதவி செய்யவேண்டுமென்பது நமது ராணுவ நிபுணர்களின் சிபார்சாகும். அது அனுதாபத்தின் மேல் செய்யும் உபகாரமல்ல, நம்முடைய தற்காப்புக்கவசியமானது.'

ஜனவரி 6-ம் தேதி வாஷிங்டனில்கூடிய 77-ம் காங்கிரஸுக்கு விடுத்த செய்தியில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் மேலும் நாஸிகளிடத்தில் தனக்கிருக்கும் அருவருப்பை எடுத்துக்காட்டி பிரிடனுக்குதவி செய்வதில் அமெரிக்கர்களுக்கு இருக்கும் திட எண்ணத்தையும் வெளியிட்டார்.

அப்பொழுது அவர் சொல்லியதாவது :—

"முயூனிக் சமதானத்தைவிடவும், இப்பொழுது பிரஸ்தாபிக்கப்படும் 'புது அமைப்பு' என்ற கொடுங்கோலைக் காட்டிலும் 1919-ம் வருஷத்திய சமாதானம் அக்கிரமமல்ல. இப்பொழுது பரவ இயலும் புது அமைப்பை அமெரிக்கா எதிர்க்கும்.

ஜனநாயக ஆக்ஷியை, உலகத்தில் ஒவ்வொரு பாகத்திலும், நேர் முகமாகவோ அல்லது, மறைந்து பொய்பிரசாரத்தாலோ கெடுத்துத்தேசங்களுக்குள் சண்டையை மூட்டப்பார்க்கிறார்கள்.

சென்ற 16 மாதங்களாக ஸ்வதந்திரத்தோடு வாழ்ந்த அநேக நாடுகள் தொலைந்து போயின. இந்த அக்கிரமத்தைச் செய்த பாதகர்களின் முன்னேற்றம் இன்னும் நின்றபாடில்லை.

ஆகவே உங்களுடைய பிரஸிடென்ட் என்ற ஹோதாவில், என்னுடைய உத்தியோகக்கடமையைச் செலுத்திச் சொல்லுவதாவது, 'நம்முடைய தேசத்துக்குவேளியேயிப்பொழுது நடக்கும் யுத்தத்தைப்பொறுத்து நம்முடைய க்ஷேமமும், ஜனநாயகத்தின் க்ஷேமமும் நிற்கிறது என்பது தான்.

நான்கு கண்டங்களில், ஜனநாயகத்துக்காக வீரத்தனமாக யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் தோல்வியடைந்தால் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, ஆஸ்திரலேஷியா கண்டங்களில் அக்கிரமமாய் சர்வாதிகாரிகள் வியாபித்து விடுவார்கள்."

இனி நாம் யுத்தம் செய்து நம்முடைய ரத்தத்தைச் சிந்தாதிருப்பதற்காக இப்பொழுது பிரிடனுக்குக் கப்பல்களும், விமானங்களும், டாங்கிகளும், பீரங்கிகளும் இனமாகக் கொடுக்கவேண்டுமென்று 53 பிரமுகர்கள் அமெரிக்கக் காங்கிரஸுக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது மாதத்துக்கு 2,400 விமான-எஞ்ஜின்களும், 700 யுத்த-விமானங்களும், 100 டாங்கிகளும், 10,000 ரைபிள் துப்பாக்கிகளும் அமெரிக்காவில் உற்பத்தியாகின்றன.

பிரிடனுக்கு அமெரிக்க ஸ்தானிகர் நியமனத்தை முன்னிட்டு ரூஸ்வெல்ட், மிஸ்டர் ஹாப்கின்ஸை தனது சொந்தப் பிரதிநிதியாக அனுப்பி, அவர் பிரிடனுக்குப் பிரயாணப்பட்டுவிட்டார். பிரிடன் சமாதானம் செய்துகொள்ள நினைப்பது விமானப்போரில் வென்றவுடனேயா, அல்லது ஜெர்மனியைத் தோற்கடித்த

பிறகாவென்று பிரிட்டனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள ரூஸ்வெல்ட் இவரை அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்கு முன் சமாதானத்தைப் பற்றிப் பேச பிரிடிஷ் தொழிலாளர்களுக்குச் சம்மதமில்லை.

## விமானப்போர்.

சென்ற வருஷத்தில் ஹாம்மேல் 82 எதிர்ப்பும், ஹாம்பர்க்மேல் 61 எதிர்ப்பும், கெல்ஸன்கர்ஷன்மேல் 39 எதிர்ப்பும், பெர்லின், வில்ஹெம்ஷேவன், ஸோயஸ்ட், டுயிஸ்பர்க்—ஒவ்வொன்றின் மேல் 35 எதிர்ப்பும், கொலோன், மான்ஹீம், ஆஸ்னுபரூக்—ஒவ்வொன்றிலும் 34 எதிர்ப்பும், பிரெமெனில் 32 எதிர்ப்பும், நடைபெற்றன. ஜெர்மானியருக்கு பிரிடன்மேல் படையெடுத்ததில் 35,00 விமானங்களும் ஐரோப்பிய பிரதேசத்தில் 375 விமானங்களும் நஷ்டமாயின.

ஜனவரி மாதம் 3-ம்தேதி காலேயோடு முடிவான வாரத்தில் பிரெமன் மேல் 2 எதிர்ப்பும், லோரியண்டின்மேல் 4 எதிர்ப்பும், இதர துறைமுகங்கள், எண்ணெய் ஸ்டோர்கள், தொழிற்சாலைகள் மேல் 16 எதிர்ப்புகளும், மற்றும் எகர்ஸ்மண்டு, எமெரிச், பிளஷிங்கு மேல் விமானப் படையெடுப்புகளும் நடந்தன. ஜனவரி முதல் தேதியன்று பிரெமன் $3\frac{1}{2}$ மணி நேரம் எதிர்க்கப்பட்டபோது 20,000 தீக்குண்டுகள் வீசப்பட்டு, ஜுவாலை ஆகாயத்தில் 120 மைலுக்கப்பால் காணப்பட்டது. ஜனவரி 3-ம்தேதியன்று மறுபடியும் எதிர்க்கப்பட்டபோது 9000 அடி உயரம் புகை கிளம்பி, குறைந்த பக்ஷம் 70 கட்டடங்களாவது எரிவது காணப்பட்டது. கிறிஸ்மஸ் பண்டிகையில் தீபங்கள் ஏற்றப்படும் பெரிய ஒரு விருக்ஷத்தைப்போல் தோன்றிற்று.

சென்ற ஞாயிற்றுக்கிழமை நெருப்பு-குண்டுகள் விழுந்ததின் பயனாக, மற்ற விபத்துக்களோடு லண்டனில் டவர்-ஹில்லில் கட்டப்பட்டிருக்கும் டிரினிடி-ஹவுஸ் சேதமாயிற்று. நியூகேட்-ஸ்ட்ரீட் என்ற தெருவானது குட்டிச்சுவர்களாய் நிற்கின்றது. ஆயினும் இதற்குக் கூப்பிடுதூரத்திலிருக்கும் இடங்களில் எல்லாம் வழக்கம்போல் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அநேக கட்டடங்கள் இடிந்துபோய் சுவர்கள் தத்தளித்து நிற்பதால் வெடிமருந்தை உபயோகித்து சுவர்களை இடித்துவிட யோசனை செய்கிறார்கள். புராதன கட்டடங்கள் பல இம்மாதிரி அழிந்துபோவதை நினைக்க மனதுக்குக் கஷ்டமாயிருக்கிறது.

இம்மாதிரியாக இனி யேற்படக்கூடிய அக்கினி உபாதியைத் தடுக்க புருஷர்கள், ஸ்திரீகள், வீட்டு ஸ்வாந்தார்கள், கடைக்காரர்கள், தொழிலாளிகள், தொழிற்சாலைகள், கிட்டங்கிகள், ஆபீஸ்களில் வேலை செய்பவர்கள் முதலானவர்களை தீப்பிடிக்காது தடுக்கவும், அணைக்கவும் கட்டாயமாய் வேலை செய்யச் சொல்லச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. கீழ்ப்படியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள். தீப்பிடிக்காது பாதுகாக்க, அநேக அதிகாரிகளும் இலாக்காக்களும் அடங்கிய ஒரு புது ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் மான்செஸ்டர் நகரத்தின்மேல் நடந்த எதிர்ப்பில் பிரீ-டிரேட்-ஹால், காட்டன்-எக்ஸ்சேஞ்சு, ராயல்-எக்சேஞ்சு, சீடாம் ஆஸ்பத்திரி, ஒருபெரிய ஆலயம் முதலிய கட்டடங்கள் சிதைந்துபோயின.

இந்த வாரத்தில் பிரிஸ்டலும், லிவர்பூலும் விசேஷமாய் எதிர்க்கப்பட்டன. பிரிஸ்டலில், ஆஸ்பத்திரிகளும், கன்னிகா மாடமும், ஸினிமா கொட்டகையும், ஒரு போஜனசாலையும், 4 கோவில்களும் ஒரு பள்ளிக்கூடமும் பழுது பட்டன. இதுதான் ஜெர்மனிக்கு அகப்பட்ட ராணுவ-கேந்திரங்கள்.

லண்டன் ஒலிபரப்பு ஆபீஸானது சமீபத்தில் இரண்டுமுறை ஒலிபரப்பும் சமயத்தில் பலமாய் எதிர்க்கப் பட்டது. ஆனால் ஒலிபரப்பும் காரியம் அன்றும் நிற்கவில்லை, பின்னும் நிற்கவில்லை. டிஸம்பர் 31-ல் ஜெர்மன் விமானங்கள் பிரிடன்மேல் படையெடுக்காததால் வருஷப்பிறப்புக் கொண்டாட்டத்துக்கு விக்கினமேற்படவில்லை. ஆனால் இதற்குக் காரணம் குளிர், பனியேயொழிய ஜெர்மனியின் நல்லெண்ணமொன்றுமில்லை. செவ்வாய்க்கிழமை யன்று ஸ்வல்ப மாக கென்ட், ஸஸக்ஸ், லிவர்பூல்-பிராந்தியங்களுக்கு எதிரி விமானங்கள் வந்தன. விபரங்கள் இந்தச் சமாசாரச் சுருக்கத்தின் இறுதியில் பார்க்கலாம்.

இந்த வாரத்தில் இரண்டு இரவுகளாக யேதோ சில விமானங்கள் வந்து அயர்லாந்தில் குண்டுகளைப்போட்டு, கடலில் கடற்-கண்ணிகளையும் பாவியிருக்கின்றன. அவைகளில் சில ஜெர்மன் குண்டுகளென்றும், கடற்கண்ணிகளென்றும் தெரிகிறது. அயர்லாந்து கவர்ன்மெண்டு ஜெர்மனிக்கு ஆக்ஷேபனையனுப்பியிருக்கிறது. ஜெர்மானியர்கள் இந்த வெடிகளை, பிரிடன் அல்லது அமெரிக்கா போட்டிருக்கவேண்டும், அல்லது விழுந்ததே பொய்யென்றும் சொல்லுகிறார்கள்.

## கடல் யுத்தம்.

சென்ற வருஷத்தில் பிரிடனுக்கேற்பட்ட நஷ்டம்—விமானம் தூக்கிச் செல்லும் கப்பல் ஒன்று, குரூஸர் 3, வியாபார—குரூஸர் 10, நாசகாரி 33, நீர்மூழ்கி 21.

ஜெர்மனிக்கு நஷ்டம் குரூஸர் 2, நாசகாரிகள் 12, ஈ போட் 1; டார்பீடோ போட் 1, நீர்மூழ்கிகள் (பல இவைகளின் தொகை ரகஸ்யமாய் வைத்துக்கொள்ள வேண்டியதால் வெளிப்படுத்தவில்லை).

இதாலிக்கு நஷ்டம் குரூஸர் 1; நாசகாரிகள் 11 (ஒன்று கிரேக்கியரால் பிடிக்கப்பட்டது), நீர்மூழ்கிகள் 25 (ஒன்று கிரேக்கியரால் பிடிக்கப்பட்டது). மேலும் டாரன்டோ துறைமுகத்தில் நடந்த எதிர்ப்பில் 3 யுத்தக்கப்பல்களும், 2 குரூஸர்களும், 2 துணைக்கப்பல்களும் பலமாய்ப் பழுதுபட்டன.

பிரெஞ்சு கடற்படை பிரிடனுக்கு உதவியாக இல்லாதுபோயும், நீர்மூழ்கிகள் நிற்க எதிரிகளுக்கு நிலயங்கள் அதிகப்பட்டும், விமானங்களிலிருந்தும், நீர்மூழ்கிகளிலிருந்தும் கடற்கண்ணிகள் பாவப்பட்ட போதிலும் பிரிடிஷ் கப்பற் படை எதிரிகளைத்துரத்தி கடல் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறது.

சில மாதங்களாக பஸிபிக்மஹா சமுத்திரத்தில் ஜெர்மன் யுத்தக்கப்பலால் அமிழ்த்தப்பட்ட 7 கப்பல்களில் சென்ற 500 மாலுமிகளும், பிரயாணிகளும் டிஸம்பர் 21-ம் தேதி பிஸ்மார்க் தீவுகளிலொன்ருகிய எமிராவில் இறக்கப்பட்டார்கள். இவர்களில் 70 ஸ்திரீகளும் 7 குழந்தைகளும் இருந்தார்கள். இவர்கள் ஜெர்மன்கப்பலில் பட்டபாடு சொல்ல முடியாது! கடல் பெரிதாயிருந்ததால் திருட்டுக்கப்பலைப் பிடிக்கத்தாமதமாகிறது.

6 ஸ்பானிஷ் வியாபார அல்லது மீன்பிடிக்கும் கப்பல்கள் சில மாதங்களுக்குள் இதாலிய நீர்மூழ்கிகளால் அமிழ்த்தப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் கப்பல்களை யெதிர்க்க முடியாததால், வேறு வேலையில்லாது இப்பேற்பட்ட கடற் கொள்ளையில் இதாலி யிறங்கியிருக்கவேண்டும்.

## ஜெர்மனியும், அது பிடித்து வைத்திருக்கும் நாடுகளும்.

ஜெர்மனியில் சர்வாதிகார மிருந்தும் வேலைக்காரர்கள் வேண்டிய அளவு அகப்படவில்லை. அசந்துபோகும் வரையில் தொழிலாளர்களை வேலைசெய்யச் சொல்லுகிருர்களாம். புதிதாக, 10 லக்ஷம் யுத்தக்கைதிகளையும், 10 லக்ஷம் பென்ஷன் தாரர்களையும், 300,000 ஸ்திரீகளையும் கட்டாயப்படுத்தி வேலைசெய்யச் சொல்லியிருக்கிருர்கள்.

## நார்வே.

இந்த தேசத்தில் நாஸிகள் துவேஷம் அதிகப்பட்டு வருகிறது. சிப்பாய்களைத்தெருக்களில் அதிகாரம் செய்யச்சொல்லி, போலீஸார் இதைத்தடுக்கக்கூடாதென்று ஜெர்மனி உத்திரவு செய்திருக்கிறது. நாஸிகளுக்கு ஏற்பட்ட வந்தனத்தைச் செலுத்த மனமில்லாமல் சில போலீஸ்காரர்கள் வேலையை ராஜீநாமாச் செய்து விட்டார்கள். ஆஸ்லோமுனிஸிபாலிடி மெம்பர்கள் 16 பேர்கள் ராஜீநாமாச் செய்துவிட்டார்கள். இவர்களில் மூன்று பேர்கள் ஸ்திரீகள். நார்வேயிலுள்ள தலைமை நீதிபதிகளெல்லோரும் வேலையிலிருந்து விலகிவிட்டார்கள்.

## நெதர்லாண்ட்.

இங்கே அரசர்வம்ச சம்பந்தமான இயக்கங்களும் அவைகளுக்கேற்பட்ட அடையாளங்களும், ராஜவாழ்த்தும் தடுக்கப்பட்டிருக்கின்றன.

## பால்கன்ஸ்.

போலீஸ், ரெயில்வே, தபால், தந்தி பாங்கி முதலிய டிபார்ட்மெண்டுகளெல்லாம் ருமேனியாவில் ராணுவ இலாகாவின் அதிகாரத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

## பிரிடன்.

யுத்தத்தை விரைவில் வெற்றியோடு முடிக்க பிரிடனில் புதுப்பிரயத்தினங்கள் செய்யப்பட்டு வருகின்றன. யுத்ததளவாடங்களையதிகப்படுத்த ஒரு கமிட்டியும், இறக்குமதிகளைக்கவனிக்க ஒரு கமிட்டியும், யுத்தத்துக்குப்பின் உற்பத்தி செய்யவேண்டியவைகளைக் கவனிக்க மற்ருெரு கமிட்டியும், வேலை குறிக்கப்படாத நான்காவதொருகமிட்டியும் இதன் சம்பந்தமாக நியமிக்கப்பட்டிருக்கின்றன.

'டைம்' என்கிற பத்திரிகை மிஸ்டர் சர்ச்சிலை 1940-வருஷத்திய கீர்த்திவானென்று பட்டம் கொடுத்திருக்கிறது. அதாவது, மனிதர்களுக்குள், 1940-ல் தேசச்சரித்திரத்தின் போக்கையே மாற்றியவராக இவரைத்தேர்ந்தெடுத்திருக்கிறது.

---

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **30—12—40.** (திங்கட்கிழமை). | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | பாதுகார்த்தல்.—சண்டை நடக்கும் இடங்கள். | ...... | ...... |
| | வேவு பார்த்தல்.—பார்டியா (Bardia)-டொப்ருக் (Tobruk) பிரதேசம். | ...... | ...... |
| | எதிரி விமானங்களை விரட்டி அடித்தல்.—ஸோமாலிலாந்தி (Somaliland)-ல் பல இடங்களில். | ...... | ...... |
| | தரையில் இருக்தும் விமானங்கள்.—பார்டிரா (Bardera) விமான நிலயம். | ...... | ஒரு விமானம் நாசமாகியது. மற்றும் சில சேதமாயின. |
| | **இதாலி (Italy).** | | |
| | இதாலிய கடற்படையில் ஒரு பகுதி.—டாரண்டோ (Taranto). | ...... | பலத்த சேதம். |
| | துறைமுகம்.—பாலர்மோ (Palermo) ... | ...... | ...... |
| | ஒரு ரஸாயன தொழிற்சாலை.—க்ரோடோன் (Crotonne). | ...... | தீப்பிடித்தது. |
| | டோரி அன்னன்ஸியாடா (Torre Annunziata); நேபிள்ஸ் (Naples). | | |
| **31—12—40.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—ஒரு தொழிற்சாலை-கொலோன் (Cologne). | ...... | நாசமாயிற்று. |
| | ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 31—12—40. | (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | கப்பற் துறைகள்.—யமூய்டன் (Ymuiden) | ...... | சேதமாயின. |
| | விமானஞ்சுடும் பீரங்கிகள் உள்ள கப்பல்—ப்ளாஷிங் (Flushing). | 2 விமானங்கள். | மூழ்கடிக்கப்பட்டது. |
| | ஒரு பாலம்—எம்மரிச் (Emmerich)-சுக் கருகில். | ...... | ...... |
| | இரவில்.—காலநிலை சரியாயில்லாததால் இன்றிரவு படையெடுப்பு இல்லை. | | |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | விரோதி சைன்யங்கள், மோட்டார் வண்டிகள், ராணுவ தளவாடங்கள் சேமித்து வைத்திருக்கும் இடங்கள்.—பார்டியா (Bardia)விலும் அதன் சுற்றுப்புறங்களிலும். | ...... | பலத்த சேதம். பலருக்குக் காயம். பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | தரையில் இருக்கும் விமானங்கள்.—காம்புட் (Gambut). | ...... | 1 விமானம் தீக்கிரையாகியது. |
| | விரோதி சைன்யங்கள் தங்கியிருக்குமிடம், விமானங்கள் இறங்கும் இடங்கள்.—குப்பி (Gubbi)க்கருகில். | ...... | தீப்பிடித்தன. 1 விமானம். |
| | ராணுவ தளவாடக்கிடங்குகள், சாமான் கிடங்குகள், மற்றும் யுத்தத்திற்குத் தேவையான சாமான்கள்.—எரிடிரியா (Eritrea)விலுள்ள அஸ்ஸாப் (Assab). | | 1 மோட்டார் வண்டி. நாசமாயிற்று. |
| | சைன்யங்கள் தங்கி இருக்கும் இடம்.—டாங்கிலா (Danghila). | | பல இடங்களில் தீப்பிடித்தது. |

## அல்பேனியா (Albania).

| | | | |
|---|---|---|---|
| | வலோனு (Valona). | 1 விமானம். | பலத்த சேதம். 1 விமானம். |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **1—1—41** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கப்பல் நிற்குமிடங்கள், கப்பல் கட்டும் இடங்கள், ட்யூட்ஸ்சே (Deutsche) வாதவம் (Vaccum) எண்ணெய் சுத்தி செய்யுமிடங்கள், சாமான் கிட்டங்கிகள், பாக்வுல்ப் (Focke-Wulfe), விமான உற்பத்திச்சாலை.—ப்ரமன் (Bremen) | | கட்டடங்கள் இடிந்து நாசமாயின; பல இடங்களில் தீப் பிடித்தது. பலத்த சேதம் ப்ரமன் (Bremen) முழுவதும் ஒரே தீமயம். |
| | துறைமுகங்கள்.—ப்ளஷிங் (Flushing), ஆஸ்டெண்ட் (Ostend), ப்ரஸ்ட் (Brest) முதலிய இன்னும் பல விரோதி ஆக்ரமித்திருக்கும் நாட்டிலுள்ளவை. | நஷ்டமில்லை. | தகர்க்கப்பட்டன. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயங்கள்.—மிமி (Tmimi), கஸாலா (Gazala), பார்டியா (Bardia), டெர்ணு (Derna). | ...... | சேதமாயின. விமானப் படையெடுப்பு வெகு கடுமையாயிருந்தது |
| | கட்டடங்கள்.—ஸாப்டிராட் (Sabderat). | ...... | பல கட்டடங்கள் இடிந்தன. |
| | விரோதி சைன்யங்கள், மோட்டார் வண்டிகள்.—கஸாலா (Kassala)வுக்கருகில் கேரு (Keru). | நஷ்டமில்லை. | ...... |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | தீப்பிடித்தது. |
| **2—1—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கடற்படை நிலயம், கப்பற்கட்டுமிடங்கள், ரயில்வே ஸ்டேஷன்.-ப்ரமன் (Bremen) | ...... | பல இடங்களில் தீப் பிடித்தது. |
| | எண்ணெய்.-எம்டன் (Emden), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam). | ...... | தீப்பிடித்தது. |
| | ரயில்வே ஜங்ஷன்.—ப்ரமனு (Bremen)க் கருகில். | 1 விமானம். | சேதமாயிற்று. |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **2—1—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | சைன்யங்கள், மற்ற ராணுவமுக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பார்டியா (Bardia) | நஷ்டமில்லை. | பலமான படையெடுப்பு. பலஇடங்களில் தீப்பிடித்தது. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | ஒரு பெரிய ராணுவ கட்டடம், மற்ற முக்கியமான இடங்கள்.—எல்பஸான் (Elbasan). | நஷ்டமில்லை. | தீயும், வெடிகளும் கிளம்பின. |
| **3—1—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கப்பல் நிறுத்துமிடங்கள், கடற்படை நிலயம், கப்பல் கட்டுமிடங்கள், தொழிற்சாலைகள், சாமான் கிட்டங்கிகள், ரயில் பாதைகள்.—ப்ரமன் (Bremen). | ...... | சேர்ந்தாற்போல் மூன்றாவது இரவு படையெடுப்பு. எங்கும் தீ மயம். பலத்த சேதம். |
| | மற்ற இடங்கள்.—விரோதி நாடு, விரோதி ஆக்ரமித்திருக்கும் பிரதேசங்கள். | 1 விமானம். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா—(Africa).** | | |
| | பார்டியா (Bardia). | ...... | டன் டன்களாக குண்டுகள் போடப்பட்டன. |
| | ராணுவ கட்டடங்கள், துறைமுகம்.—டொப்ருக் (Tobruk). | ...... | தீயும், வெடியும் கிளம்பின. 1 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. |
| | விமான நிலயம்,—எல்கஸாலா (El Gazala). | ...... | ...... |
| | விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்.—மார்டுபா (Martuba). | ...... | 3 விமானங்கள் நாசம். |
| | பாதுகார்த்தல், வேவு பார்த்தல்.—சண்டை நடக்கும் இடங்கள். | 1 விமானம். | 3 விமானங்கள், மற்றும் சில சேதமாயின. |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 4—1—41 (சனிக்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—ப்ரஸ்ட்—(இங்கிலாந்தி (England) ன் மேல் படையெடுக்க ஹிட்லர் உபயோகப்படுத்த விரும்பும் துறை முகங்களில் முக்கியமானது). | ...... | 1 நாசகாரிமேல் குண்டு வீழ்ந்தது, தீப்பிடித்தது. |
| | இரவில்.—ஹாம்பர்க் (Hamburg). | ...... | ...... |
| | 2 ஜேர்மன் சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்கள்.—நார்வே (Norway) கடற்கரைக்கப்பால். | ...... | சேதமாயின. |
| | **இதாலிய ஆபிரிக்கா—(Africa).** | | |
| | தற்காப்பு முஸ்தீப்புகள், மற்றும் ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பார்டியா (Bardia). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | துறைமுகம்.—பொம்பா (Bomba). | ...... | சேதமாயிற்று. |
| | விமானச்சண்டை.—லிபியா (Libya). | ...... | 3 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன, 1 நாசமாயிற்று. |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | **அல்பேனியா (Albania)** | | |
| | ரோட்டு சந்திப்புகள், ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்—எல்பஸான் (Elbasan). | ...... | சேதம் அதிகம். |
| 5—1—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கப்பல் நிற்குமிடங்கள், கப்பல்கள், விமான நிலயம்.—ப்ரஸ்ட் (Brest). | ...... நஷ்டமில்லை. | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ராணுவ கட்டடங்கள், விமான நிலயங்கள், கடற்படையினர் வசிக்கும் இடங்கள், பட்டணத்தின் தற்காப்பு முஸ்தீப்புகள் டொப்ரூக் (Tobruk). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 5—1—41. | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | விமானச் சண்டை—லிபியா (Libya)வில் பல இடங்கள். | ...... | 7 சண்டை விமானங்கள், 4 குண்டுபோடும் விமானங்கள். பல சேதமாயின. |
| | கடற்படை நிலயம்.—மஸாவா (Massawa) | ...... | ...... |
| | பாதுகார்த்தல்.—கென்யா (Kenya), ஸூடான் (Sudan) எல்லைப்புறங்கள். | ...... | ...... |

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 31—12—40. | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கென்ட் (Kent), ஸஸ்ஸெக்ஸ் (Sussex), கிழக்கு ஆங்கிலிய (Anglia)ப் பட்டணம். | ...... | சேதமில்லை. ஒருவருக்கும் காயம் இல்லை. |
| | இரவில்.—விமானப்படையெடுப்பு இல்லை. | ...... | ...... |
| 1—1—41. | (புதன்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—படையெடுப்பு இல்லை. | ...... | ...... |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம், லிவர்ப்பூல் (Leverpool), மிட்லண்ட்ஸ் (Midlands), வேல்ஸி (Wales)-ல் பல இடங்கள். | ...... | சொற்பச் சேதம் சிலருக்குக் காயம். சேதமில்லை. |
| 2—1—41. | (வியாழக்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கெண்டி (Kent)ல் ஒரு பட்டணம்; மேற்கு இங்கிலாந்தி (Englnd)ல் மற்றொரு பட்டணம். மற்றும் சில கடற்கரைப் பிரதேசங்கள். | ...... | சேதமில்லை. சிலருக்குக் காயம். |

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **2—1—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | இரவில்.—கிழக்கு கவுண்டி (East County)யில் இரண்டு பட்டணங்கள்; வேல்ஸி (Wales)ல் ஒரு பட்டணம். | ...... | பல இடங்களில் தீப் பிடித்தது. பலருக்குக் காயம். |
| | அயர்லாந்து (Ireland). அயர் (Eire) ஆறு தடவைகள் விமானங்கள் வந்தன. நடுநிலைமைக்கு பங்கம் ஏற்பட்டது. | ...... | பல பொது ஜனங்களுக்குக் காயம். சிலர் இறந்தனர். |
| **3—1—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கெண்டி (Kent)ல் ஒரு பட்டணம். | ...... | சொற்பச் சேதம்; ஒருவருக்கும் காயமில்லை. |
| | இரவில்.—பிரிஸ்டல் (Bristol), லண்டன் (London) பிரதேசம், இங்கிலாந்தி (England)ல் இன்னும் சில பட்டணங்கள். | ...... | சில கட்டடங்களுக்குச் சேதம். |
| **4—1—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கெண்டி (Kent)ல் ஒரு கடற்கரைப் பட்டணம்; கிழக்கு, தென் கிழக்கு இங்கிலாந்து (England). | 3 விமானங்கள். | சேதம் அதிகமில்லை. சிலருக்குக்காயம். 1 விமானம். |
| | இரவில்.—தென்வேல்ஸி (Wales)ல் ஒரு பட்டணம். | ...... | ...... |
| **5—1—41** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia)வில் ஒரு பட்டணம்; கிழக்கு ஆங்கிலியா (Anglia)வில் வேறு சில இடங்கள். | ...... | சொற்பச் சேதம். "ஜெர்மானியர் ஆடுமாடுகளைச் சுட்டுக் கொன்றனர்". |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம், லிவர்பூல் (Liverpool), மிட்லண்ட்ஸ் (Midlands), வடகிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில பட்டணங்கள். | ...... | சிலர் மாண்டனர்; சிலருக்குக்காயம். சேதம் மிகச்சொற்பம். |

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்; |
|---|---|---|---|
| 6—1—41. (திங்கட்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்.—லண்டன் (London)–(மூன்று தரம் விமான அபாய எச்சரிக்கை இருந்தது.) படையெடுப்பு இல்லை. | ...... | ...... |
| | கெண்ட் (Kent), கிழக்குக் கவுண்டிகள் (Eastern Counties). | ...... | ...... |
| | இரவில்.—பிரிட்டனி (Britain)ன் மேல் இன்று எங்கும் படையெடுப்பில்லை. | ...... | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

## இந்த "இளைஞர்" விஷயம்.

இளைஞர்களை எந்நேரமும் ஸ்தோத்திரம் செய்யும் தன்மையை கண்டித்து சமீபத்தில் ஒரு புஸ்தகம் பிரசுரிக்கப்பட்டது. சென்ற 25-வருஷகாலமாக ஜெர்மானிய அதிகார வர்க்கத்தாரின் மூலாஜாவின்பேரில் இளைஞர்களை தயாரிப்பதின் பயன்களை சர்ச்சை செய்தால் சிலர் ஆத்திரப்படக்கூடும். ஹிட்லர் தத்துவம், பாஸிஸ்ட் முறை, இவைகள் ஐரோப்பிய சிறுவர்கள் மனதில் போர் என்பது உண்மையில் ஒரு உயர்ந்த தத்துவமென்று தோன்றும்படி செய்திருக்கின்றன; அதற்கு கைகண்ட பலன் இப்போது நடக்கும் யுத்தம். ஆனால் அச்சு தேசத்தார்களின் விரோதிகள் நாட்டு இளைஞர்களிடத்தில் அச்சு தேசத்தாருக்கு அந்தரங்கத்தில் பெரும்பயம் என்று சொல்லுவேன். அரசாங்க மென்ற யந்திரத்திற்கு இளைஞர்களை அடிமைகளாக்காத தேசத்தாருடன் அவர்கள் போர் புரிகிறார்கள்; இந்தக் குழந்தைகளின் வீரத்தன்மையைப் பாருங்கள்; அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் கப்பல் உடைக்கப்பட்டு சிறு படகுகளில் புசல் காற்றடிக்கும்போது போகும் சமயம் பாடுகிறார்கள்; விமானப் படையெடுப்பு நடக்கும்போது தன் பெற்றோர்களுக்கும் சிநேகிதர்களுக்கும் உதவிபுரிகிறார்கள்; வேண்டியபொழுது வீரர்கள்போல் சகிக்க வேண்டியதை சகிக்கிறார்கள்; அடுத்த தலைமுறையில் தலையெடுக்க வேண்டியவர்கள் இவர்களே. ஒரு வாறு ஜெர்மானியர் ஜயித்தால் (தெய்வம் அதற்கு இடம் கொடுக்காது!), அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அடக்கியாளும் முறையைப்பற்றி என்ன நினைப்பார்கள்? நம்மைக் காட்டிலும் நெஞ்சழுத்தத்துடன் இந்த புது முறையை எதிர்க்கும் தன்மையுள்ளவர்களல்லவா? கூடாது, இளைஞர்களை கண்டிக்காதீர்கள். அவர்களை ஆதரியுங்கள், காப்பாற்றுங்கள், போற்றுங்கள். நமது அதிகாரத்திலிருப்பதைக் காட்டிலும் அவர்கள் அதிகாரத்தில் உலகத்திற்கு க்ஷேமமுண்டு.

## சுவாதீனமுள்ள ப்ரெஞ்சுக்காரர்கள்.

தளகர்த்தர் டிகாலே கொஞ்சம் குறைவாக சிலர் பேசுகிறார்கள். இதற்கு டாக்கார் சம்பவம் காரணமாக இருக்கலாம். ஆனால் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் அவருக்கு நன்றியுள்ளவர்களாகவிருக்கவேண்டும். இந்த வீரரின் முயற்சியின் பயனாக ஜெர்மனியை எதிர்ப்பவரின் சங்கியை அடியிற்கண்டபடி அதிகரித்திருக்கிறது.

செம்மையாகத் தயாரிக்கப்பட்டு ஆயுதபாணிகளான துருப்புகள், 35,000 பெயர்கள்.

யுத்தக் கப்பல்கள் 20-க்கு மேல்.

செம்மையாகத் தயாரான விமானிகளில் 1,000 பெயர்கள்.

வியாபாரக் கப்பல்கள் 60.

அதனினும் முக்கியம் ப்ரான்ஸு தேசத்தில் டிகாலுக்கு செல்வாக்கு அதிகரிக்கிறது. பிடேனிடம் ஜனங்களுக்கு அன்பும் மரியாதையும் இருக்கலாம், ஆனால் அவர் சகபாடிகளிடம் அப்படியில்லை. லவாலே விரோதியாக வெளிப்படையாகவே கருதுகிறார்கள். பிளாண்டின், (Flandin) பொதுவான் (Baudouin) இவர்களுக்கு பாங்குகளிலும் பத்திரிகைகளிடத்திலும் செல்வாக்கு இருந்தபோதிலும், ஜனங்கள் காரியுமிகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக புலப்பட துவக்கியிருக்கிற டிகாலின் திறமையையும் தூரதிருஷ்டியையும், அவரது ததும்பி நிற்கும் தேசாபிமானத்தையும் பார்த்து ஜனங்கள் அவரை ஒரு பெரிய வீரனாகக் கருதுகிறார்கள். தளகர்த்தர் வேகானும் (General Weygand) வட ஆபிரிகாவில் 4,00,000 பேர் கொண்ட அவர் சைனியமும் அதே அபிப்ராயமுள்ளவர்கள் என்பது நிச்சயம்.

## ஜயங்கள், ஜயம்.

தளகர்த்தர் வேவல் வட ஆபிரிக்காவில் நடத்திய அபாரமான யுத்தத்தைப் பற்றி நாம் அடக்கத்துடன் கவனிக்கவேண்டும். இதாலியர் ஜம்பம் எப்போது பலிக்காமல் போகுமென்று நமக்கு நன்றாய் தெரியும். அதை கிரேக்கர்கள் ஜயிக்கும்படி சமயம்பார்த்து வேண்டியவைகளை செய்தோம். அச்சு தேசத்தாரின் சைனியங்கள் நமது சைனியங்கள் முன் நில்லாவென்று நாம் நிரூபித்துவிட்டோம். நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லாதபோனாலும் அப்படிச் செய்தோம். (மேலும் நமது பூராபலமும் இல்லை—பாதி அளவிற்குத்தான் நமது படைகளிருந்தன). முஸோலினிக்கும் வெகு சஞ்சலத்தை உண்டாக்கிவிட்டோம். சாம்ராஜ்ய போக்குவரத்து மார்க்கங்களை—அதாவது எகிப்து, ஸூயஸ் கால்வாய் இவைகளை—காபந்து செய்யவேண்டியதுதான் ஆபிரிக்காவில் இப்போது நமது கடமை. புது நாடுகள் சம்பாதிப்பது என்பது நமது நோக்கமல்ல. அதாவது, நைல் நதிக்கரையிலிருக்கும் நமது சைனியம் பாதுகாப்பிற்கே ஒழிய படையெடுப்பிற்காக அல்ல. பார்டியா (Bardia) நமது கைக்கு விழுந்ததே அநேகமாக நமக்கு போதுமானது. இனிமேலும் நாம் படையெடுத்து செல்லுவோமானால் நமது சைனியம் வகையரா வெகுதூரம் பரவுவதுடன், இதாலிய தளகர்த்தர் கிரேஸியானிக்கு (Graziani) எந்த சங்கடம் ஏற்பட்டதோ, அதேவிதமான சங்கடம் நமக்கும் ஏற்படக்கூடும். அவ்வளவு இல்லாமற்போனாலும் சொற்ப அளவிற்கேனும் அது நமக்கு ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. கடலில் நமக்கிருக்கும் பலமே நம்மைக் கார்க்கிறது. நான் சொல்லுவது என்னவென்றால், யுத்த முறைகளை கவனிக்க, லிபியாவில் இதாலிய படைகள் அடியோடு அழிந்தாலுமே, யுத்தத்திலிருந்து இதாலி விலக்கப்பட்டதாக ஆகாது. ஆகையால் வெற்றிக்கு மேல் வெற்றி வரிசையாக வரப்போகிறது என்று எண்ணி ஏமாறக்கூடாது. அப்படியொன்றும் எண்ணி மோசம் போகாமல் கடவுளைப்போற்றி, தளகர்த்தர் வேவலுக்கும், ஆஸ்திரேலியப் படைகளுக்கும், நமது இந்திய படைகளுக்கும் வந்தனமளிப்போம். இவர்கள் பலத்தால் நாம் என்ன, சிலோன், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா என்ன, எல்லாருமே தேவையான சாமான்களை தங்குதடையின்றி அனுப்ப முடிகிறது. இம்மாதிரி செய்யும் சக்தி தங்களுக்கு வருவதானால், இதாலியர் தங்கள் உயிரையே கொடுப்பார்கள்.

## நிர்ப்பந்தம்.

ஹிட்லர் பிறர் நிர்பந்தத்திற்கு கட்டுப்படுகிறவனல்ல. பிறரை நிர்பந்தப் படுத்துவதில்தான் அவனுக்கு கவனம். முதல் அடி அடிப்பதில் விஷயம் இருக்கிறது. இது ஜெர்மானியருக்குத் தெரியும்! ஆகையால் ஒரு விஷயம் துவக்குவதில் தடை ஏற்பட்டால் ஏப்படியிருக்குமோ, அதுவும் ஹிட்லர் மாதிரி பேர்வழிக்கு எப்படி இருக்குமோ, தெரியாது. அவன் தற்கால நிலை இப்படித்தான். பிரிடன் படையெடுப்பில் பசையில்லை; கொரடா வேலை நடைபெறவில்லை; மேற்கு பக்கம் செய்யவேண்டியதெல்லாம் பாக்கியாயிருக்கிறது; அமெரிக்கர் மனோபாவம் ஸ்பஷ்டமாக தெரியவந்தமேல், மூவர் உடன்படிக்கையில் ஜப்பானியருக்கு அவ்வளவு உற்சாகத்தைக் காணோம்; ஹிட்லரின் முக்கிய தோழனின் உளறுபடியால் வேறு தோழன் தேடவேண்டியதாக இருக்கிறது; ருஷியாவோ சுயகாரிய புலியாய் புதிர் போட்ட பாவனையாக இருக்கிறது. ஆகையால், நாள் நக்ஷத்திரம் குறிப்பிட்டு காரியங்கள் நடத்தும் வழக்கமுள்ள ஹிட்லர் சரியான காரியமாய் ஏதேனும் செய்துகாட்டவேண்டியதாகவிருக்கிறது. அது என்ன காரியமாக இருக்குமோ நமக்குத் தெரியாது. ப்ரான்ஸை நிர்பந்தப்படுத்தி தன்னுடன் இழுத்துக்கொண்டு ஆனது ஆகட்டுமென்று பிரிடன்பேரில் மற்றொரு தரம் படையெடுக்கப் பார்ப்பானே, அல்லது பாஸ்பரஸ் ஜலசந்தியில் பாய்வானே, அல்லது தள்ளமுடியவில்லையே என்று நினைத்துக்கொண்டு பாஸிஸ்ட் தத்துவத்தின் சார்பாக ஏதேனும் செய்வானே, நமக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று நமக்குத் தெரியும். அது ஹிட்லருக்கும் தெரியும். என்ன செய்வது, எப்படி செய்வது, எப்போ செய்வது என்று திர்மானம் செய்வதெல்லாம் ஹிட்லர் கையிலில்லை. இனி அவர் செய்யப்போவதெல்லாம் சம்பவங்களின் நிர்ப்பந்த வசத்தால் செய்யவேண்டியது, அது ஹிட்லருக்குப் பிடிக்காது; தன்னிடம் பிரமை கொண்டிருக்கும் ரேடியோவை நம்பின அடிமைகளுக்கு இதையெல்லாம் சமாதானமாகச் சொல்லும் கடமை கோயபெல்ஸ்க்கு பிடிக்காது.

## எதிர் கக்ஷி.

ஆனால் ஹிட்லரின் அதிகாரம் வெகு பலம். அதை நிர்தாட்சண்யமாக செலுத்துகிறார். அவர் லகான் பிடித்தமணியமாகவே யிருக்கவேணும்; ஒரு பக்கம் கொஞ்சம் ஆலஸ்யம் காணப்பட்டால் இன்னொரு பக்கம் வேலை மும்மரமாகும் என்று எதிர்பார்க்கவேணும். பிரிடிஷ் பாதி அளவிற்குதான் ஆயுதபாணிகள்; இந்த ஸ்திதியில் வெளியிற் நாமே எதிர்ப்பு வேலை செய்வதும், பிரிடனை பாதுகாப்பதும் சுலபமல்ல. ஆனால், இந்த வருஷம் பிரிடன் பூரா ஆயுதபாணியாக ஆகிவிடுமென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி ஆனமேல் உற்சவம் ஆரம்பித்துவிடும். இது ஆரம்பிப்பதைத்தான் முன்னே கூடியே தடுத்துவிட வேண்டுமென்பது ஹிட்லரின் நோக்கம். ஏனென்றால், யுத்தமானது 1943, 1944 வருஷங்கள்வரை போகாது என்று Mr. சர்ச்சில் நம்புகிறார் என்று நம்மைப் போலவே ஹிட்லருக்கு தெரியும். முக்கியமான சில கைத்தொழில்களைப்பற்றி

முன்யோசனையாகவே நாம் சில வசதிகள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியிருப்பதில் அவை பூர்த்தியாவதற்கு வேண்டியகாலத்தை அவர் குறிப்பிட்டதை சிலர் யுத்தம் முடிவதற்கு அவர் குறிப்பிட்ட காலமென்று பிசகான எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

## குண்டு பாரமும், தூரமும்.

பிரிடிஷ் விமான போர் முறையைப்பற்றி சில சமயம் சிலர் கண்டிக்கிறார்கள். பதிலுக்கு பதில் செய்வது என்பதை பிரிடிஷ் ஆதரிக்கவில்லை என்பதால்மட்டும் இல்லை. இதை ரேடியோ பிரசாரத்திற்கு ஜெர்மானியர் உபயோகிக்கிறார்கள். வெகுதூரம் போகவேண்டியதில், குண்டு பாரம் குறைச்சலாகவும், குண்டு பிரயோகத்தால் சேதம் குறைச்சலாகவும் இருக்கவேண்டுமாதலால், விமான தாக்கல்களில் ஜெர்மானியர் கைதூக்கல் என்று அவர்கள் மேலெழுந்தவாரியாக எண்ணிவிடுகிறார்கள். இப்படி அவர்கள் வீசுமுன் பெரிய கைத்தொழில், கப்பற்தொழில் நிலயங்களான ஹாம்பர்க் (Hamburg), ப்ரிமன் (Bremen) நகரங்களிலுள்ளவர்கள் அபிப்ராயங்கள் தெரிந்துகொள்ளப்பட்டிருக்காது. பிரிடிஷ் விமானப்படையைப்பற்றி கண்டித்து பேசுமுன் அடியிற்கண்ட சில குறிப்புகளை கவனிப்பது நலம். ஒரு விமானம் கொண்டு போகக்கூடிய குண்டு கனம் போக வேண்டிய தூரத்தைப் பொருத்திருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டு பார்த்தாலே, மேலே சொன்ன ஜெர்மானிய கட்சிகளை ஆக்ஷேபித்து சில குறிப்புகள் அடியில் கண்டிருக்கிறது :—

(*a*) சேதம் ஏற்படுவது சரியானபடி குறி வைப்பதை பொருத்ததேயன்றி குண்டின் கனத்தை பொருத்ததல்ல. குறிவைத் தடிப்பதில் ஜெர்மன் படையைக் காட்டிலும் பிரிடிஷ் விமானிகள் சமர்த்தர்களென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. குறி சரியாயிருப்பது எவ்வளவு உயரத்திலிருந்து விமான தாக்கல் ஏற்படுகிறதென்பதை பொருத்தது. ஜெர்மன் விமானங்கள் 20,000 அடி உயரம் போய் தாக்கவேண்டும்; பிரிடிஷாரோ, 10,000 அடி உயரத்திலும் விமான நிலயங்களை தாக்கும் சமயம் 500 அடி உயரத்திலுமிருந்து தாக்குகிறார்கள்.

(*b*) வெகு உயரம் போகாமல் கீழ் தாக்குகளிலிருந்து தாக்கும் சமயம், குறி சரியாயிருப்பது தூரத்தைக் காட்டிலும் காற்றின் வேகத்தைப் பொருத்தது. 10,000 அடி உயரத்திலிருந்து தாக்கும் சமயம் குறியைவிட்டு 100 அடிக்குள் குண்டுகள் விழுமானாலும், 30,000 அடி உயரத்திலிருந்து குண்டுகள் போட்டால் குறிக்கு $\frac{1}{2}$ மைலுக்குள் விழுந்தாலே அதிர்ஷ்டமாக நினைக்கவேண்டும்!

(*c*) ஜெர்மன் வாதம் உண்மையென்று வைத்துக்கொண்டாலும் அது பெர்லின் போன்றவும் ரூர் (Ruhr) பிரதேசத்திற்கு கிழண்டை பக்கமிருக்கும் ஊர்களுக்குத்தான் அன்வயிக்கும். மேற்கு பக்கமுள்ள கைத்தொழில் நிலயங்களும், ஜெர்மானியர் வசமாக்கிக்கொண்ட நாடுகளும் நமது கன விமானங்களின் சஞ்சார எல்லைக்குள்ளாகவே இருக்கின்றன. வடகிழக்கு ப்ரான்ஸிலிருந்து

ஷெப்பீல்ட் (Sheffield) எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரந்தான் பிரிடிஷ் விமான புறப்பாடு ஸ்தானங்களிலிருந்து, டியூஸ்ஸெல்டார்ப் (Dusseldorf) போன்ற இடங்கள்.

## அரசரும் — அரசரும்.

நமது மன்னர்பிரான் — அவர் நீடூழி வாழ்க!—குண்டுகள் விழும் அவருடைய லண்டன் அரண்மனையிலிருந்து ஒலிபரப்பில் பேசுகிறார்; தகரத்தொப்பியும் வாயு மூடியும் அணிந்து விமானங்களால் அழிந்த பிரதேசங்களை பார்வையிடுகிறார்; தன் சாந்நித்தியத்தாலும் தன் நடத்தையாலும், அஞ்சா நெஞ்சாலும் தன் படைகள், சிப்பந்திகள் பார்லிமெண்டு இவைகளுக்கு ஊக்கமளிக்கிறார். அபிஸீனிய அரசன் ஹெய்லி ஸெலாஷி ஆக்கிரமிக்கப்பட்ட தன் நாட்டின் எல்லைபுறத்துக்குச்சென்று, இதாலிய விரோதிக்கு எதிராக சூழ்ச்சிகளைச் செய்து, தன் பிரஜைகளைத் தூண்டி விடுகிறார். நார்வே அரசன் ஹாக்கன், விரட்டப்பட்ட போதிலும் தளரா நெஞ்சுடன், ஜெர்மானியர்கள் வருத்தும் தன் பிரஜைகளின் உற்சாகத்தை ஊக்குவிக்கும் தன் தேசங்கள் மூலம் வளர்த்து வருகிறார். ருமேனிய அரசர் அப்பாவி காரோலும், அவர் தலையைக் கொண்டுவந்ததற்கு பரிசு உண்டென்று விளம்பரம் செய்யப்பட்ட போதிலும், ஜெர்மானியருக்கு ஒரு அபாயமாகவே இருக்கிறார். ஆனால் 70 லட்சம் ஜனங்கள்கொண்ட சிறு நாடான கிரீஸால், வெறுக்கத்தக்க இதாலிய துரோகி இடமிருந்து ரத்தக்களரியுடன் விடுதலை பெற்றுவரும் அல்பேனியாவின் அரசர் எங்கே? ஜோக்மன்னரும் அவர்குடும்பத்தாரும் லண்டனில் ஒரு உயர்ந்த ஹோட்டலில் சௌக்கியமாக இருக்கிறார்களாம். ஆம், மன்னரும் உண்டு, மன்னரும் உண்டு.

## ஒரு புது புனைப்பெயர்.

என்னைவிட பெரியவர் ஒருவரின் உதவியால், ஒரு சிலேடை மொழியில் துணிந்தேன். அது பாஸிஸத்தை மேன்மைப்படுத்திக்கூறுவதிலும் இதாலிய ஒலி பரப்பிலும் முகான்மையாயுள்ள ஒருவர் பெயரிலிருந்து பிறந்தது; அவர் பெயர் பாரினஸி (Farinacei). கிரேக்கர்கள் தங்கள் சத்துருக்களாகிய இதாலியர்களை, இதாலியில் பிரியத்துடன் வழங்கிவரும் மாகரோனி (Macaronie) யிலிருந்து, 'மாகரோனிகள்' என்று அழைக்கிறார்கள். மாகரோனி ஒரு 'பாரினஸி' (Farinaceous) அதாவது இடித்த மாப்பண்டம் (அதாவது வலுவின்றி சண்டையில் இடித்தால்போல் மிருதுவாக இடிபட்டு புலுபுலுவென்று உதிருகிறவர்கள், என்பது சிலேடை) அதேபோல் 'வெர்மிஸெல்லி' யும் (சேமாய்) இதாலியர்களின் பிரியமான உணவு. 'வெர்மிஸெல்லி' என்பதன் அர்த்தம் 'சிறுபுழுக்கள்' என்று (யுத்தத்தில் இதாலியர்கள் புழுப்போல் அல்பமாகக்கருதப்பட வேண்டியவர் என்பது சிலேடை) இச்சிலேடைகள் இதாலியர்களுக்கு விதியால் அமைந்தன போலும்! இந்த அறிக்கையின் ஒரு காபியை கிரேக்க யுத்த நிலையத்துக்கு அனுப்பத்தான் வேண்டும். அவர்கள் இச்சிலேடைகளை சுவைப்பாரல்லவா?

# 1941-ம் வருஷத்திய யுத்த அறிகுறிகள்.

## சர்வாதிகாரிகள் ஐரோப்பா கண்டம் பூரா புரட்சி செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோற்றுவருகின்றன.

அட்மிரல் ஸர் ஆண்ட்ரூ கன்னிங்காம் இதாலிக்கு தலைமாட்டிலுள்ள மால்டாவில் கிரிஸ்ட்மஸ் பண்டிகை கொண்டாடினர். இது சந்தேகமற, உலகிற்கு, மத்தியதரைக்கடலில் இதாலி பயமுறுத்தல்களைப்பற்றி ஆங்கிலக் கடற்படை கொஞ்சமேனும் கவலைப்படவில்லை என்பதைக் காட்டியது.

ஆங்கிலக் கடற்படை அது நிறுத்தப்பட்ட பழைய இடமான மால்டா தீவுக்கு வந்ததும் மால்டாக்காரர்கள் பெருத்த கரகோஷம் செய்தனர்; இது நியாயமானதே. ஏனெனில், இதாலி யுத்தத்தில் இறங்கியதிலிருந்து அச்சத்ருவின் ஆகாய விமானங்கள் 200 தடவைக்குமேல் படையெடுத்தன. நல்ல வேளையாக ஏராளமான பூமியின் கீழுள்ள ரட்சக ஸ்தானங்களால் உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்படவில்லை.

இடையே பிரிடிஷ் கடற்படை வெளியே போயிருந்தது—மால்டாவின் பிரசித்திபெற்ற பெரும் துறைமுகம் இதாலியின் விமான குண்டு வீசிகளுக்கு இலக்காகி கப்பல்களை பொறியில்போல் அகப்படுத்தியிருக்கும். இதாலியர்கள் ஓயாமல் மால்டாக்காரர்களும் இதாலியர்களும் ஒரே ஜாதியர், நெருங்கின சம்பந்தமுண்டு என்று பிரசாரம் செய்து வருகிறார்கள்; மால்டாக்காரர்களுக்கு இதில் பிடித்தமுண்டா இல்லையா என்று ஆலோசிக்க அவகாசம் கிடைத்தது. கிருஸ்துமஸில் அவர்கள் கோஷம் செய்ததைப் பார்த்தால் அவர்களுக்கு அது பிடிக்கவில்லை போலும்.

### ஒரு சூசனை.

இன்று, இதாலியன் விமானப்படையின் தாக்குதலிலிருந்து அபாயம் அவ்வளவு திருணமாக மதிக்கப்பட்டது—அதாவது, ஆங்கில மத்தியதரைக் கடற்படை மால்டாவுக்கு வந்ததுடனல்லாமல், அங்கேயே இரண்டுநாள் தங்குமளவு. இதாலியிலிருந்து அபாயம் பெரிதாக இருக்குமாயின், கடற்படையின் நடத்தை முட்டாள் தனத்தில் சிகரம் வைத்ததாகும். ஆனால் ஆங்கில கடற்படை முட்டாள் காரியங்களில் இறங்குவதில்லை. அதனால் இதன் அனுமானம் என்ன? எல்லோரும் பார்க்கலாம்.

மால்டாவுக்கு கடற்படை சென்றது சிறிது ஆலோசிக்கவேண்டிய விஷயம். இதாலி யுத்தத்தில் இது ஒரு சிறு சம்பவம்தான். ஆயினும் அடுத்துவரும் மாதங்களில் எதை எதிர் பார்க்கலாம் என்பதற்கு இது ஒரு முக்கியமான சூசனை.

ஒரு பிரிடிஷ் அட்மிரல், இதாலியின் கரையிலிருந்து, ஆகாயத்திலும் கடலிலும், இருந்து வரக்கூடிய அபாயம் கருதப்படவேண்டியதில்லை என்று மதிப்பாராயின், முஸோலினிக்கு மத்தியதரைக்கடலின் மீதிருக்கும் பிடி மிகவும் பலஹீனமாக இருக்கவேண்டுமல்லவா? படையின் தங்குதல் காட்டுகிறபடி, அப்பிடி பலமில்லாமல் இருக்குமானால், வரும் மாதங்களில் இதாலி யுத்தத்தை விட்டு ஒடுக்கப்பட்டு சண்டை செய்யமுடியாத நிலையில் வெளியேற்றப்படுவதை நாம் எதிர் பார்க்கலாம்.

வாஸ்தவத்தில், முஸோலினி தன்னையும் தன் நாட்டையும் பிழைக்க வைக்க வேண்டுமானால், யுத்தத்தைவிட்டு வெளியேறுவதுதான்—அதுவும் எவ்வளவு சீக்கிரமோ அவ்வளவுக்கு அவ்வளவு நலம் — புத்திசாலித்தனம்; அதற்கும் இதுவே தருணம்.

அச்சுக்கூட்டாளியான ஜெர்மனிக்குத் தானும் தனித்து நடக்கமுடியும் என்பதைக்காட்ட முஸோலினி கிரீஸ் மீது படையெடுத்தான். அது அவலமாய் முடிந்தது. ஆபிரிக்காவில் மிரட்டல் உருட்டலால் காரியத்தை சாதித்துக் கொள்ளலாம் என்று பார்த்தான்; அதுவும் பலிக்கவில்லை. இக்கட்டுரை எழுதும் போது புது ரோமசாம்ராஜ்யம் ரீதியாக அல்பேனியா, அபிஸீனியா இரண்டும் சிலவேட்டில் எழுதவேண்டியதுபோல் தோன்றுகிறது.

## ஹிட்லர் வந்தாலோ...........

பிரிடிஷார், கிரேக்கர்கள் கையில் இதாலி இந்தப்பாடுபடுகிறது. ஆனால் அதன் கூட்டாளி ஹிட்லர் மத்தியதரைக்கடலின் வடக்கே தன் நலங்களைப் பாதுகாக்கவேண்டும் என்று தீர்மானித்தால், இதாலிபடும்பாடு சொல்லி முடியாது.

அதன் தாத்பர்யம் இதுதான்—முஸோலினி இவ்வளவு சிரமப்பட்டு முன்னுக்குக்கொண்டு வந்த தேசம், பொருளாதாரத்திலும் ராஜீயத்திலும் ரெய்ஷின் (ஜெர்மனி வகையரு) அடிமை, தன் விஷயங்களில்; தான்— உதாரணமாக, டென்மார்க்கைவிட — நிர்ணயிக்கும் உரிமை இல்லை, என்ருகும். இதற்கு, ஆஸ்ட்ரியா இதாலியின் வடபாகத்தில் ஆக்கிரமித்திருந்தகாலம் பன்மடங்கு சிலாக்கியமாகிவிடும்.

இது போன்ற ஒரு முடிவு இதாலியில் ஒரு புரட்சியை உண்டு பண்ணும். அதில் பெனிகோவும் (முஸோலினி) அவர் மூளையில்லா மாப்பிள்ளையும் ஒரு நாள் தங்களைச்சுட நிறுத்தியிருக்கும் படைமுன் நிற்கநேரிடலாம்.

இதற்குமாருக, பிரிடனுடன் சமாதானம், இதாலியை நாடுகுறைவின்றி சுதந்திரத்துடன் மீட்கும். சமாதானத்துக்காக முஸோலினி நேரில் பேரம் பேசினாலும் சரி, வேறெந்த இதாலியத் தலைவர் பேசினாலும் சரி, ஜெர்மன் வற்புறுத்தல் நீங்கினால், சாயம் வாங்கின பாஸிஸ்டு கட்சிக்கு இதாலி ஜனங்கள் ஒரு தீங்கும் இழைக்க மாட்டார்கள்.

இது விஷயத்தில் இதாலிக்கும் ஜெர்மனிக்கும் ஒரு வித்தியாசம் இருப்பது போல் தோன்றுகிறது. புதிய ரோமசாம்ராஜ்யம் சம்பந்தமாக பாஸிஸ்டு கட்சிக்கு மட்டில் மயக்கம் இருந்தது; இதாலிய ஜனங்களுக்குக்கிடையாது. ஜெர்மானியர்களோ என்றால் எல்லோருமே நாஸி களுக்கலை தாங்களும் கண்டுவருகிறார்கள்.

அது எப்படி இருந்தாலும் சரி. இதாலியின் தோல்வைகள், இப்பொழுது அதை ஜெர்மனிகாலில் விழுவதா, பிரிடன் காலின் விழுவதா என்பதைப்பற்றி உடனேயே ஒரு முடிவுக்குவரும் அளவு, அவ்வளவு பெரும்தோல்விகளாக இருக்கின்றன. ஜெர்மனிக்கு கீழ்படிவதை இதாலியில் ஒரு பெரும் வகுப்பினர் ஆட்சேபிக்கிறார்கள் என்று நம்ப இடமிருக்கிறது. அடுத்த வருஷம் பிறக்கும் முன் இதாலி இரண்டில் ஒரு வழியைத் தேர்ந்துவிடும்.

இதாலிக்கு விரோதமாக நாஸிகள் விச்சியுடன் ஊடாடுவதிலிருந்து, இதாலி எதைத்தேரும் என்று எதிர்பார்ப்பது கடினமல்ல.

## நிஜ யுத்தம்.

ஜெர்மனி சம்பந்தமாக, யுத்தம் 1941-ல் முடிந்துவிடும், என்று அநேகர் ஜோஸ்யம் கூறியிருக்கிறார்கள். இவைகளை நாம் உறுதியென நம்பவேண்டியதில்லை. ஆயினும், ஏதாவது விந்தைகள் நிகழ்ந்தால் ஒழிய, ஜெர்மனியின் நிலைமை மோசமாகிக்கொண்டேதான் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் மிகையொன்றில்லை.

**ஹிட்லர் தனக்கும் பிரிடனுக்கும்தான் நிஜசண்டை என்பதை அடிக்கடி விளக்கியிருக்கிறான். இதைப்பற்றி ஏதாவது ஒரு முடிவு ஏற்படும்வரை யுத்தம் முடியும் என்று எதிர்பார்க்கமுடியாது.**

இம்முடிவு, இருதரத்தாருக்கும் ஆபத்துக்கள் நிறைந்தபோதிலும், ஆகாய யுத்தத்தால் ஏற்படாது. பிரிடனுக்கு அது விரோதமானாலும், அது படையெடுப்புக்கு வழி விலச்கியதாகும். இதுவும், ஒரு சைன்யத்தை பிரிடனில் இறக்கும் வரையிலாவது கடல் ஆதிக்கியத்தை எதிர்பார்த்து நிற்கிறது.

இம்மாதிரி முயற்சி செய்யப்படலாம் என்று பிரிடிஷாருக்கு கவர்ன்மெண்டார் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இம்முயற்சி பலித்தால், ஜெர்மன் நிலைமையை சமாளிக்கக்கூடிய விந்தைகளில் இதை ஒன்றாகக்கூறலாம்.

மேலே மொட்டையாகக் கூறப்பட்டிருப்பதற்கு விலக்குண்டு. பிரிடனைப் பிடிக்க ஹிட்லர் தன்படைகளில் பெரும்பான்மையை அதற்காக என்று ஒதுக்கி வைக்கவேண்டும்; அதில் பெரும்பான்மையை இழக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

காலம் செல்லச்செல்ல, தன்பின்னே ஐரோப்பாவில் தான் அமுக்கி வைத்துக் கொண்டிருக்கும் நாடுகள் அவனுக்கு விரோதமாக எழும்பாமல், எவ்வளவு துருப்புக்களை இதற்காக விடுவிக்கலாம் என்பது ஒரு பிரச்னை. இதில் ஒரு முக்கியமான விஷயம், சென்ற வருஷத்திய அபஜயமயக்கத்திலிருந்து தெளியும் பிரான்ஸின் எதிர்ப்புவேகம்.

மேலும், ருஷியர்கள் பிரிடனின் ஒத்தாசைக்கு வரத்தயாராக இல்லாவிட்டாலும், அது ஜெர்மனியால் தோற்கடிக்கப்படுவதை வெறுமன பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள். ஜெர்மன் துருப்புகளுக்கு போகவர வழி விடக் கூடாதென்று பல்கேரியாவுக்கு சமீபத்தில் ருஷ்யா ஒரு தாகீது செய்திருக்கிறது. இது ஜெர்மனி கிழக்கே வலுத்துவருவதைக்கண்டஞ்சி ருஷ்யா எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்று தோன்றுகிறது.

ஹிட்லர் பிரிடனைப் பிடிக்க முயற்சிப்பானகில், தன்படைகளுள் சிறந்தவற்றை மேற்கே அனுப்பியிருப்பான்; ஸ்டாலினை கிழக்கே 'நீ விரும்பியதைச் செய்' என்று அனுமதித்திருப்பான். இம்மாதிரி எல்லாவற்றையும் ஒரு ஆட்டத்தில் பணயமாக வைத்து ஹிட்லர் தன் அதிர்ஷ்டம் என்னமாக இருக்கிறதென்று பரீட்சை பார்த்தாலும் பார்க்கலாம். ஆயினும் அதற்கு இடையூறுகளும் வளர்ந்து கொண்டே வருகின்றன. நாம் அவற்றை ஏற்கனவே கூறியதுடன்; பிரிடனில் படையெடுப்பை தடுக்க எடுத்துக்கொண்டிருக்கும் பிரம்மாண்டமான முஸ்தீபுகள் இருக்கின்றன; அவைதான் இதனை இறுதியில் முடிவு செய்யக் கூடியவை.

## தேங்கிய புரட்சி.

ஜெர்மனியைக் காப்பாற்றக்கூடிய விந்தைகளைக் கூறினோம். அவற்றில் ஒன்று, ருஷ்யா ஜெர்மனிக் கட்சியில் சேர்ந்து அதற்கு ஒத்தாசை புரிவது; ஒத்தாசையில்லாவிட்டாலும், ஜெர்மனி கிழக்கே ஸூயஸை நோக்கி எகிருவதை தடுக்காமலிருந்தால் போதும்.

இது ஹிட்லருக்கு பயனளிக்கக் கூடியது. ஏனெனில் பிரிடனுக்கு ரத்தக் குழாய் போன்ற ஒரு மார்க்கத்தை அது அறுப்பதுடன், மறுபடியும் இயங்குவதற்கு அது இடங்கொடுப்பதாகும். தற்பொழுதோ ஜெர்மன் யுத்தயந்திரம், ஆகாயத்தில்தவிர, ஓட்டத்திற்கு இடமில்லாமல் தேங்கி நிற்கிறது. நாஸிஇயந்திரம் போன்ற ஒரு யுத்த அரசியல் யந்திரத்துக்கு இது மிகவும் வியாதி பிடிங்கும் நிலைமை.

அரசியல் சாதாரண பழமொழிகளில் இது ஒன்று-புரட்சி புரண்டோடாமல் தயங்கினல் அது அழியும், என்பதும், அதுவரை முன்வந்தது வீணுகி நிலைமை பழய ஸ்திதிக்கு திரும்பும் என்பதும். இதுதான் ஹிட்லரின் முக்கிய பிரச்னை. அவன் செய்திருக்கும் புரட்சி ஐரோப்பா முழுவதும் பாதித்திருக்கிறது; ஆனல் அதை உருவகப்படுத்தி நிலைநிறுத்த அவனல் முடியவில்லை. சமாதான ஷரத்துக்கள் பேனு நாட்டி முடிவாக எழுதப்படும்வரை, அக்காண்டம் முழுவதும் யுத்த சன்னஹத்துடன் இருக்கவேண்டும். அதையொட்டி அரசியல் நிலைமையும் தெளிவுபடாமல் இருக்க வேண்டியதுதான்.

## ஜெர்மனியின் கஷ்டங்கள் அதிகரிக்கின்றன.

ஆனதால், நாம் விரசு எடுப்பதில் கணக்கிடவேண்டியது, நாஸிப்புரட்சி அதற்கு எதிரிடையாயுள்ள சக்திகளை மீறமுடியுமா முடியாதா என்பது.

இச்சக்திகள் பீரங்கிகளும் விமானங்களும் மட்டிலல்ல. ஹிட்லர் முன் செல்ல முன் செல்ல, இச்சக்திகளும் விருத்தி அடையும். நாஸிப்புரட்சியின் கஷ்டங்களும் அதிகரிக்கும்.

புரட்சியின் ஆதாரம் முடிவாக ஜெர்மனியில்தானிருக்கவேண்டும். ஹிட்லர் தான் ஜெயித்த நாடுகளை எவ்விதத்தில் உபயோகப் படுத்தினாலும் சரி, அவன் முன் செல்லும் ஆர்வம் ஜெர்மானியரிடம்தான் இருக்கவேண்டும்.

இன்னும் எந்நேரம்தான் ஜெர்மனி எதிர்த்து நிற்கக்கூடும்? ஜெர்மன் ராக்ஷஸப் படைகள் இழைக்கக்கூடிய அழிவை குறைத்துப்பார்ப்பது அறியாத்தனம். ஆயினும், ஜெர்மானியருடைய மூலபலம் அளவில்லாதது என்று மதிப்பதும் அறியாமையே.

ஒரு உதாரணம், பிரிடன்மீது ஆகாயத்திலிருந்து குண்டுகள் ஓயாமல் ஜெர்மானியர் வீசமுடியவில்லை. இடையே இடையே நிறுத்தத்தான் வேண்டி வந்தது.

பிரான்ஸின் நிலைமை மற்றொரு விசித்திரம். அது, நாஸித் தலைவர்கள் கண் மூடித்தனமாக எல்லோரையும் பகைவனுக்கிக்கொள்ள முடியாதென்பதை உணர்ந்ததைக் காட்டுகிறது. இப்பொழுது அவர்கள் பிரான்ஸை நயவஞ்சமாக ஏமாற்றப்பார்க்கிறார்கள், பலாத்காரத்தாலல்ல.

அதேபோல் ஐக்கிய அமெரிக்காவைக்கண்டு நாஸிகள் பல்லை நெரநெர என்று கடிக்கத்தான் முடிகிறது. ஐக்கிய நாட்டைப் பயமுறுத்த ஜப்பானைக் கையாளாக உபயோகிக்கப்பார்த்தார்கள். இவைகள் நாஸிகள் தங்கள் பொறுப்பு களை தற்பொழுது விரிவாக்கிக்கொள்ள இஷ்டப்படவில்லை என்பதைக் குறிக் கின்றன.

## யுத்த முறைகள்.

ஒன்றும் பலிக்காவிட்டால், ஆக்கிரமிக்காத பிரான்ஸைப் பொறுத்தும் அல்லது அமெரிக்காவைப் பொறுத்தோ—இது எப்படி சாத்தியம் என்று புரிய வில்லை—ஒரு பைத்தியக்காரனைப்போல் யுத்தவெறியால் அவர்கள் இறங்கலாம். இதில் ஏதாவது ஒன்றில் இறங்கினால் அது அவர்களுடைய அந்திம முயற்சி, வெறுங்காலங்களில் இம்மாதிரி அபாயகரமான முயற்சிகளில் இறங்கியிருக்க மாட்டார்கள், என்பது ஜெர்மானியர்களே உணருவார்கள். இந்த அறிகுறிகளும் இந்த வருஷத்தில் தலை காட்டினாலும் காட்டலாம்.

ஜெர்மன் புரட்சியை மற்றொரு சோதனை வரும் 12 மாதங்களில் பரீட்சிக்க காத்திருக்கிறது. இதுவரை அவர்கள் யுத்த முறை இது. ஆவேசங்கொண்ட சில தாக்குதல்கள், இடையே இடையே ஓய்வு. இம்முறை போலந்து, பிரான்ஸ் போன்ற இடங்களில் ஆவேச தாக்குதல்களை சாத்தியமாக்கியது. இத்தாக்குதல் கள் குறைந்த முஸ்தீபுகளுடன் லாரிகளால் ஸ்தாயிவரை முடுக்கிவிடப்பட்ட துருப்புகளால் செய்யப்பட்டன.

ஆனால் வாரக்கணக்கில் அல்லாமல் அவர்களுடன் மாதக்கணக்காகவோ அல்லது வருஷக்கணக்காகவோ சண்டைபோட நன்ருய்ப் பயிற்சி செய்யப்பட்ட ஒரு தரைப்படையை, அதிலும் ஜெர்மானியர்களை எப்பொழுது தாக்குவது என்று நல்ல சமயம் பார்த்துத்தாக்கும் படையை, அவர்கள் எதிர்க்க நேரிட்டால் என்ன வாகும் என்பதை யாரால் சொல்லமுடியும்? வெறிப்பாய்ச்சல்களும் போதை மருந்துகளும் இந்த சந்தர்ப்பங்களில் பயன்படமாட்டா.

பிரிடிஷார் தாக்கத்தயாரானுல், ஜெர்மானியர்கள் எதிர்பார்க்கவேண்டியது, இதுபோன்ற ஒரு நீடித்த சண்டைதான். சர்ச்சில் 1941, 1942-ம் ஞு அதாவது இவ்வருஷம், அடுத்த வருஷம்—யுத்தத்துக்கு ஏற்கனவே தயார் செய்துகொண்டு வருவதாக வெளியிட்டிருக்கிருர். வட ஆபிரிக்கா சம்பவங்கள் அவரும் அவருடைய யுத்த மந்திரிகளும் 'தாக்குவதற்கு இதுதான் தருணம்' என்று தீர்மானித்தால் என்ன நடைபெறும் என்பதை காட்டுகின்றன.

இவ்வருஷம் ஒருக்கால் ஐரோப்பா கண்டத்திலேயே கணக்குகள் நேர் செய்து கொள்ளவேண்டிய தருணம் வரலாம். ஹிட்லரே யுத்தம் ஐரோப்பாவில் நடக்கலாம் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிருன்.

ஒன்றுமட்டில் சொல்லலாம்; முஸோலினி பிரிடிஷாரை ஆபிரிக்காவில் எப்பொழுது தாக்குவது என்பது முழுவதும் தன்னைப்பொருத்ததே என்று மார்தட்டிக்கொண்டான். அது பொய்த்தது. அது போலவே ஐரோப்பாவில் சண்டை துவக்கும் மணி இந்தத்தடவை ஹிட்லர் கைவசமாக இராது.

# பிரிடனின் தைரியத்திற்குக் காரணம்.
# தன் அபிப்பிராயத்தை ஒரு ஆங்கிலேயர் சொல்லுகிருர்.
# ஒரு வாழ்க்கை முறைக்காக போர்.

(விக்ஹாம் ஸ்டீட் எழுதியது.)

இந்த யுத்தத்தில் நடக்கிற எல்லா சமாசாரங்களையும் பிரிடன் படையெடுப்பை வைத்து ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. முஸோலினி பேரில் கிரேக்கர் பெற்ற கீர்த்தி வாய்ந்த வெற்றிகளையும், ஹிட்லரிடம் மேற்கொண்டும் படிந்துபோவதில் பிரெஞ்சுக்காரருக்கு நாளுக்கு நாள் அதிகரிக்கும் வெறுப்பையும், நார்வேயில் கிளர்ச்சியையும், உலாந்தா பல்லைக் கடித்துக்கொண்டு போராடுவதையும் கவனிக்க, பிரிடிஷார் மனங்கலங்கி நாஸி ஜெர்மனியை தோற்கடிக்க முடியுமோவென்று சந்தேகப்பட்டால் ஐரோப்பா கடைசியாக சுதந்திரமடைவது சாத்தியமல்ல.

இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி உண்மை விவரமென்ன? கவெண்ட்ரி, பர்மிங்ஹாம், லிவர்பூல், ப்ரிஸ்டல், ஸௌதாம்டன் போன்ற ஊர்களின்பேரில் ஜெர்மன் விமானங்கள் தாக்கினதால் பிரிடிஷார் மனம் தளர்ந்ததா, அல்லது பதில் அடி அடித்தது முடிவில் வெற்றிபெறும் சக்தி குறைந்ததா? இந்த கேள்விகளுக்கு ஆங்கிலேயர் கொடுக்கும் மறுமொழியை பிறர் கொஞ்சம் சந்தேகத்துடன் பார்ப்பார்கள். பற்றுதலில்லாமல் பதில் சொல்லக்கூடுமானாலும், ஆங்கிலேயர் அபிப்பிராயம் சரியாவென்று பிரிடிஷ் அல்லாதார் சந்தேகிப்பார்கள்.

இருந்தாலும் நான் தாடஸ்திகமாகவும், உண்மையாகவும் பதில் அளிக்கிறேன். இருபது வருஷகாலம் என் நாட்டை நான் வெளியூரிலிருந்து கவனித்து வந்தேன். அந்நிய நாட்டு அரசியல் நிபுணர்களிடம் பிரிடிஷார் நடவடிக்கைகளைப்பற்றி எடுத்துச் சொல்லவேண்டியது எனது தொழிலின் ஒரு அம்சமாகவிருந்தது. அவர்களை நான் ஏமாற்றியிருந்தால் என்னல் பிரயோஜனமிருந்திராது. அவர்களுக்கு எனது அபிப்பிராயத்திலிருந்த நம்பிக்கையும் போயிருக்கும். இன்னுமொரு 20 வருஷகாலம், ஊரிலிருந்து கொண்டே தேசீய விஷயங்களைப் பற்றி நுட்பமாக கவனித்து அபிப்பிராயம் சொல்லவேண்டிய கடமையுள்ளவனுக இருந்தேன். நான் அநேகமாக, தவறவில்லையென்று பொது தஸ்தவேஜுகளில் கண்டிருக்கிறது. இப்படிப்பட்ட என் அனுபோகத்தை வைத்து பிரிடன் படையெடுப்பை சர்ச்சை செய்கிறேன். நான் சொல்லுவதை பிறர் அங்கீகரிக்கிருர்களாவென்பது இரண்டாம் பக்ஷம். முக்கியமாக என் திருப்திக்காக என் முடிவுகளை சொல்லுகிறேன்.

"இந்த பிரிடிஷாரைப்போல் ஒருவரையும் நாம் பார்த்ததில்லை. இங்கேயே வசித்து வந்தாலொழிய அதை யாரும் நம்பமாட்டார்கள். அவர்கள் வெகு அமரிக்கையுள்ளவர்கள், எதையும் பரபரப்பன்னியில் சகிக்கிருர்கள்" என்று மனேபாவ சர்ச்சையில் கீர்த்திபெற்றவன் மகளான ஆனு ப்ருடு (Anna Frued) சமீபத்தில்

சொன்னுள். இது உண்மை. ஆனுல் நமது ஜனங்கள் அமரிக்கையாய் இருப்பதற்கு காரணமின்னதென்று இந்த வாக்கியத்தில் சொல்லப்படவில்லை. பிரிடனில் பிறந்து வளர்ந்துவந்து, ஆனுல் பிரிடிஷாருக்கு வழக்கமில்லாத பேச்சுவன்மையுள்ளவர்தான் இதற்கு சமாதானம் சொல்லலாம். நான் சொல்லுகிற சமாதானம் இதுதான்.

தலைநகர் பேரில் நடந்த ஜெர்மன் விமான தாக்கல்களில் பெரும்பாலும் நடந்த சமயத்தில் நான் லண்டனில் இருந்தேன். நாசகரமான தாக்கல்கள் நடந்த சமயங்களிலும், அவைகளை அடுத்து உடன்காலங்களிலும் பிரிஸ்டல் போன்ற இடங்களில் இருந்திருக்கிறேன். என் தேசத்தாரின் மனேபாவத்தை கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறேன். அவர்கள் காப்ராப்படவுமில்லை, மனம் தளரவுமில்லை; இதற்கு என்ன காரணம்?

காப்ராப்படுவதிலைாவது மனச்சோர்விலைாவது லாபமொன்றுமில்லையென்று காரியகாரணத்தாலில்லாமலே அவர்களுக்கு ஒரு உணர்ச்சி உண்டென்பது ஒருவித காரணம். வாயைத் திறந்து சொல்லாத போனுலும் தாங்களே அதைப்பற்றி ரொம்ப நினைக்காத போனுலும், இந்தப் போரில் வெற்றி அடையவில்லை என்ருல் அவர்கள் சுதந்திரம் இழந்துவிடுவார்களென்று உணருகிருர்கள். அவர்களுக்கு சுதந்திரத்துடன் வாழ்வதாக தீர்மானம். வெற்றியன்றி வேறு வழியிருப்பதாக அவர்கள் மனதில் தோன்றுவதே இல்லை.

ஆகையால் ஹிட்லரை ஒழிக்க அவர்கள் தயாராகிக் கொண்டிருக்கும் பொழுதே, அவனுல் ஏற்படும் கஷ்டநஷ்டங்களை பல்லைக் கடித்துக்கொண்டு சகிக்கிருர்கள். மற்ற நாட்டார்களைக் காட்டிலும் வீரத்தன்மையுள்ளவர்கள் என்பது, அல்லது அப்படி எண்ணுவது, ஒரு காரணம். வெகுநாளாய் சுதந்திரத்துடன் சுயஆட்சி பெற்றவர்களாதலாலும் அப்படியிருக்கிருர்கள். செத்தாலும் சாவார்களே ஒழிய கீழ்படிவது என்பது அவர்களுக்கு இல்லை.

பிரிடிஷாரையும் அவர் மனநிலையையும் ஹிட்லர் சரியாய் அறியவில்லை. அவர்கள் ஜெர்மானியரை போன்றவர் என்று நினைக்கிருன். அவர்கள் அப்படியில்லை. ஜெர்மானியர் சுபாவத்திலேயே கட்டுப்பாடுள்ளவர்கள், தலைவருக்கு கீழ்படிகிறவர்கள். பிரிடிஷ்காரர் கட்டுப்படுகிற சுபாவமில்லை, தங்கள் பொறுக்கின தலைவர்களாயிருந்தாலன்றி கீழ்படுகிறதில்லை. இன்று அவர்கள் தாங்களாகவே கட்டுப்பாட்டிற்கு அடங்கி, தாங்கள் ஒத்துக் கொண்ட தங்கள் தேசிய கவர்ன்மெண்டின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிகிருர்கள். ஜெர்மானியரைப் போலில்லாமல், வெற்றியென்பதை தவிர வேறு எதுவுமிருப்பதாக அவர்கள் நினைக்கவில்லை. ஜெர்மானியர்களுக்கு நாஸிதத்துவம் தோல்வியடைந்தால் ஜெர்மனிக்கு அழிவென்று இல்லை. நாஸி ஆதிக்கமில்லாத, வேறு விதமான வளமையுள்ள காலங்கள் அவர்கள் ஞாபகத்திலிருக்கிறது. அவர்கள் இப்போது படும் பாடெல்லாம், ஹிட்லருக்காகவே ஒழிய, ஜெர்மனிக்காக இல்லை. பிரிடிஷாரோ ஒரு சர்வாதிகாரி (Dictator)-க்காகவாவது ஒரு அரசியல் முறைக்காகவாவது கஷ்டப்படவில்லை; ஒரு வாழ்க்கை முறைக்காக இவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கிருர்கள். அதைப்பற்றி

அவர்கள் தெரிந்து ஆலோசிக்கிறார்களென்றில்லை. ஆனால் அதைப்பற்றி யோசிப்பவர் போலவே சகஜமாக நடக்கிறார்கள். எப்போது அபஜய மடைந்தோம் என்ற ஸ்மரணையில்லாதவர் என்ற காரணத்தால் பிரிடிஷார் வெற்றியடைகிறார்கள் என்று சொல்லுவதுண்டு. பிரிடிஷார் தோல்வியடைந்தார்கள், ஆனால் அது அவர்களுக்குத் தெரியவில்லையென்று ஹிட்லர் சமீபத்தில் சொன்னார். அது பிசகு. பிரிடிஷ் தோல்வியடையவில்லை; மேலும் தோல்வியடைந்ததாக அவர்கள் எண்ணும்வரை அவர்களுக்குத் தோல்வி கிடையாது. ஹிட்லரைத் தோற்கடிப்போம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.

இந்த விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டு, இந்தப் போரில் நடக்கும் சம்பவங்களைப்பற்றி நாம் முடிவுகள் செய்யவேண்டும். இப்போதைக்கு ஹிட்லர் இதாலியர் ஆனபடியாகட்டுமென்று விட்டுவிட்டு, பிரிடிஷ் பட்டணங்களை தகர்க்கப்பார்க்கிறான். முஸோலினியை விட்டு லவாலுடன் சேர்ந்து வேலைசெய்யப் பார்க்கிறான். இதையெல்லாம் பிரிடிஷார் வெகு அமைதியாய் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் பலம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது; அவர்கள் மனம் தளரவில்லை; பிரிட்டிஷ் இல்லை, ஜெர்மானியர்தான், ஜெர்மானியரே தோல்வியடைந்தாரென்று ஒருநாள் அறிவார்கள்.

---

## இந்தியாவின் பேரில் படையெடுப்பு ஸாத்தியமா?
## ஜெனரல் ஸர் வால்டர் கர்க் அவர்களின் அபிப்பிராயங்கள்.
## மத்தியகிழ் பிரதேசம், சிங்கப்பூர், இவைகளின் முக்கியம்.

சில நாட்களுக்குமுன் இந்திய பத்திராதிபர் ஒருவர் மேற்படி ஜெனரல் ஸர் வால்டர் கர்க் என்பவரை சந்தித்து ஸம்பாஷணை செய்தார். அன்னாரிடம் இந்தியாவின் பேரில் படை எடுப்பது ஸம்பவமா அல்லது அஸம்பவமா என்பதைக் குறித்து தன்னுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்.

மேற்படி கர்க் அவர்கள் சில வருடங்களுக்குமுன் இந்தியாவில் பல முக்கியமான ராணுவ இலாகா உத்தியோகங்கள் வகித்தவர். நடுக்கிழ் நாடுகளுக்குகந்த ராணுவ ரஹஸ்யத்திலும் அணிவகுக்கும் தந்திரத்திலும் மிகவும் நிபுணர் என்றும் விசேஷ அதிகாரி என்றும் பெயர் பெற்றவர். பல வருஷங்களுக்கு முன் மஹத்தான கிரேக்க வீரர் அலெக்ஸாண்டர் ஜயக்கொடி நாட்டிவந்த மார்க்கமாக இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறமாய் இந்தியாவை எதிர்ப்பது அஸம்பாவிதம் என்று மேற்படி கர்க் அவர்களின் திருடமான அபிப்பிராயம்.

மேற்கண்ட மார்க்கத்தில் உள்ள ஐரான், ஆப்கானிஸ்டான் நாடுகள் அச்சு நாட்டு ஸர்வாதிகாரிகளுடன் மாறுபாடான லக்ஷ்யங்கள் உள்ளவர்கள். அவர்களுடைய கொள்கைகளோ, கிரேட் பிரிடன் எந்தக் கொள்கைகளைக் கைக்கொண்டு எந்த நோக்கத்துடன் போர் புரிகிறார்களோ, அக்கொள்கைகளும் அந்த நோக்கங்களுமேதான் ஆகும்.

இந்தியாவின் தரை எல்லைப்புறங்கள் மூலமாக, சத்ருவை நாம் எதிர் பார்க்கத் தேவை இல்லை என்றும், இதர தேசங்களின் பலாபலன்களை நோக்குங் கால் தரை மார்க்கமாக எந்த திக்கிலிருந்தும் இந்தியாவின் பேரில் படையெடுப்பது அஸாத்யம் என்றும் கர்க் அவர்கள் கூறுகிறார். ஆனால் பர்ஸியன் குடாக் கடலில் நம்முடைய சத்ரு எவனேனும் வேர் ஊன்றிக்கொண்டானேயாகில், அப்பொழுது தான் அவனிடமிருந்து நமக்கு மஹத்தான அபாயம் நேரிடக்கூடும். அதை எதிர்பார்த்து அச்சம்பவம் நடைபெறாமல் நாம் தடுத்துவிடவேண்டும்.

சத்ருவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் நிலையம் ஒன்று பர்ஸியன் குடாக்கடலில் ஏற்பட்டு விட்டால், அதன் காரணமாகவும் அதை அநுஸரித்தும், ஆங்கிலேயக் கப்பற்படையை வகுக்கும் அவச்யம் ஏற்படும், இந்தியாவிற்குக் கடல் மூலம் போக்கு வரத்தும் தடைபடும்.

“ஆகையால் ஸூயஸ் கால்வாய்க்கு அருகாமையில் உள்ள தேசங்களான, எகிப்து, துருக்கி, ஸிரியா, பாலஸ்தீனம், ட்ரான்ஸ்ஜார்டன் இவைகள் ப்ரகிருத யுத்தம் சம்பந்தப் பட்ட மட்டில் இந்தியாவின் பிரான நிலையமாகவே கருதப்படலாம். இந்த தேசங் களையும் ஒருக்கால் ஜெர்மனி ஜயித்து விட்டால், ஈராக், ஈரான் தேசங்களையும் புகுந்து விடக்கூடும். அத்தருவாயில் பர்ஸியன் குடாக்கடலில் ஜெர்மனி தன்னுடைய ஆதிக்கியத்தையும் சைனியங்களையும் ஸ்தாபிக்கலாம்.” என்று ஜெனரல் கர்க் அவர் கள் அறிவிக்கிறார். ஆனால் அவ்வித ஏற்பாடு ஏதேனும் ஜெர்மனி செய்தால், அதுவும் நிச்சயமாக நடைபெறாது என்றும் அவருடைய தீர்மானம். நிற்க, ஜெர்மனி மேற்கண்ட மனப்பான்மையுடன் சைன்யங்களை அணிவகுக்கும் என்பதை மட்டும் நான் எதிர்பார்க்கவேண்டும். பாஸ்பரஸ், டார்டனெல்ஸ் இவை களை நோக்கி, ஜெர்மனி படையெடுத்தால், தக்ஷணமே துருக்கி கிரேட் பிரிடனுடன் சேர்ந்து ஜெர்மனியை எதிர்க்கும்.

ஒருக்கால் ஜெர்மனி நம்மைக்காட்டிலும் ஸமுத்திர ஆதிக்கியம் பெற்றால், இந்தியாவின் பேரில் படையெடுப்பது என்பது ஸம்பாவிதமா என்று வினவ, கர்க் அவர்கள் பதில் சொன்னதாவது, “ஏன் இயலாது? ஸமுத்திரத்தில் ஆதிக்கியம் பெற்ற எந்த சத்ருவுக்கும், ஸாத்தியமுமாகும், இந்தியாவை எதிர்ப்பது மிகவும் சுலபமான காரியமும் ஆகும்.”

“ஆனால், இந்தியாவை ஜயிப்பது சீக்கிரமாகவும், சுலபமாகவும் நேரிடும் என்பது அர்த்தமில்லை. இந்தியாவின் மகத்தான விஸ்தீரணம், சீனா தேசத்தைப் போல், இந்தியாவின் தற்காப்பிற்கு ஒரு பெரிய சாதனம். இந்திய சைனியம் இப்பொழுது இருக்கும் நிலைமையிலேயே, சீனா சைனியத்தைக்காட்டிலும், உக்கிர மாகவும் ஊக்கமாகவும் போர்புரிய வல்லமை உள்ளது. நிற்க, இந்தியாவின் சைனியத்தையும் மிகவும் விருத்தி செய்ய இடமும் இருக்கிறது” என்றும் கூறினார்.

“ அந்த சந்தர்ப்பத்தில், இரண்டு முயற்சிகள் நமக்கு ஸாதகமாக உள்ளவை. ஒன்று ; பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்திலுள்ள இதர தேசங்கள் ஒன்று சேர்ந்து ஸமுத்திர மூலமாக நம்முடைய பலத்தை அதிகரிக்கும் ; இரண்டு இந்தியாவிற்குள்ளேயே எல்லா ஜனங்களும் ஒக்குமத்தாக இருப்பது. இந்தியர்கள் மட்டும் ஒன்று சேர்ந்தால், தங்கள் நாட்டில் உள்ள திரவியம் முதலிய இதர ஸாதனங்களை ஏராளமாக, இடைவிடாது விருத்தி செய்து, இந்தியாவை சத்ரு ஜயிப்பது என்கிற எண்ணத்தை முறி அடித்துவிடும் என்பதில் ஐயமில்லை,” என்றும் அவர் அபிப்பிராயம்.

“ஆனால் இவ்விதமாக சத்ருவினால் நடத்தக்கூடும் என்பதெல்லாம் மிகவும் அஸம்பாவிதம்.”

## உண்மையான தற்காப்பு.

“கிரேட் பிரிடனுக்கு ஸமுத்திரத்தில் ஆதிக்கியம் உள்ளவரை, இந்தியாவின் பேரில் படையெடுப்பது என்கிற ப்ரச்னையே கிளம்ப இடம் இல்லை. இந்தியாவின் முக்யமான தற்காப்பு ஸ்தானங்கள் இந்தியாவின் எல்லைப்புறங்களுக்கப்பால் கிடக்கின்றன. ஆனதுபற்றி, கிழக்கே சிங்கப்பூர், மேற்கே நடுக்கீழ் நாடுகள் இவைகளின் தற்காப்பை பலப்படுத்த ஒத்தாசை செய்யவேண்டியதுதான் இந்தியாவின் கடமையாகும். அவ்விதம் செய்வதால்தான், இந்தியா தேசத்திலேயே கோரக்காக்ஷிகளைக் கிளம்ப விடாமல் தடுக்க இயலும்.”

இந்தியாவின் போர்புரியும் சக்தி உலகப்ரஸித்தி வாய்ந்தது, பட்டாளங்கள் கூட்ட ஏராளமான வீரர்களும் தயாராக இருக்கிறார்கள். இந்த ஸ்திதியிலும் கூட இந்தியாவில் பத்து லக்ஷம் வீரர்கள் அடங்கிய ஒரு படை கூட்ட இயலும் ; அப்படைக்கு நவீன யுத்தத்திற்குறிய ஆயுதங்கள் சேகரித்து உதவி செய்தால், அப்பேற்கொத்த சைன்யத்தை வெல்ல வேறு எவராலும் இயலாது. நடுக்கீழ் நாடுகளில் எந்த எதிரியையும் புசல் காற்று போல் தனக்கு முன்னால் அடித்துக் கொண்டே போகக்கூடும்.”

“நவீன யுத்தத்தில் கேவலம் ஒரு வீரனுடைய புஜபராக்ரமம் மட்டும் ஒரு பெரிய விஷயமல்ல. இதர யுத்த ஸாதனங்கள் சேகரித்து இடை விடாது ஆயுத பலம் குறையாவண்ணம் ஏற்பாடுகள் செய்து வரவேண்டும். இந்த இலாகாக்களில் இந்தியா படிப்படியாக விருத்தியாகிக் கொண்டு வருகிறது. கேவலம் துப்பாக்கி, வெடிமருந்து இவைகளுடன் நிற்காமல், நவீன யுத்தத்திற்குறிய இதர யுத்த தளவாடங்களும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். நடுக்கீழ் நாடுகளில் இங்கிலாந்து ஸ்தாபித்திருக்கும் சைன்யங்களுக்கு அப்போதைக்கப்போது தேவையான உபகரணங்கள் நீண்ட ஸமுத்திர மார்க்க மூலம் அளித்து பாதுகாத்துக்கொள்வது மிகவும் சிரமசாத்தியமான காரியமாய் இருக்கிறது. இந்த சிரமத்தின் எப்பாகத்தையாவது இந்தியா ஏற்றுக்கொண்டால் இங்கிலாந்திற்கு பளு குறைவதுடன், இந்தியாவும் தற்காப்பை பலப்படுத்திக் கொள்வதாகவும், அமைதி ஏற்பட்ட காலத்தில் செல்வப்பெருக்குக்கு ஏதுவாகவும் ஆகும்.”

## ஜெர்மனியில் ராஜீய ஆகாயப்படைகள் தாக்கும் பத்ததி.
## பொருக்கப்பட்ட லக்கியங்களின் வகைகள்.
## நீண்டகால, குருகியகால தத்துவங்கள்.
## எண்ணெய் ஆலைகள், போக்குவரத்து இவைகளின் நாசம்.

"மான்சேஸ்டர் கார்டியன் என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட வியாசத்தில் ஜெர்மனியை குண்டுவீச்சுகளால் தாக்குவதிலுள்ள பத்ததியைப்பற்றி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது."

ஒரு படையெடுக்கும் தேசத்தைச் சார்ந்த பாமர ஜனங்களுக்கு, தினேதினே நிகழும், இந்த அல்லது அந்த ராணுவஸ்தலம் குண்டுவீச்சுகளால் தாக்கப் பட்டது என்ற செய்திகள் ஒரு தொடர்ந்த சம்பந்தமுள்ள விஷயமாகப் புலப்படுத்து வது மிகவும் கஷ்டம். ஒரு நீண்டகால அளவில் நிகழ்ந்திருக்கும் விவரங்களைச் சேர்த்துப்பார்த்தாலொழிய, மேற்படி நிகழ்ச்சிகள் ஒன்றோடொன்று பூகோள சரித்திர பூர்வமாகவோ அல்லது விவேக பூர்வமாகவோ சம்பந்தப்பட்டவைகளாகக் காணப்படமாட்டாது. இப்படித்தான் ராஜீய ஆகாயப்படை ஜெர்மனியையும், ஜெர்மானியரால் ஆக்ரமிக்கப்பட்ட தேசங்களையும், தாக்குதல் காணப்படுகிறது. இவர்களுடைய நோக்கம் இரண்டு: அதாவது, தாத்காலிகமாக எதிரிகளின் எதிர்க்கும் சக்தியை குறைவுபடுத்துவதொன்று, பின்னும் முடிவில் அவர்களின் யுத்த முயற்சிகளையும், அவைகளை உபயோகப்படுத்தும் சக்தியையும் பலஹீனப் படுத்துவது மற்றொன்று. சென்ற இரண்டுமாதகாலமாக முக்கியமாய் இந்த நீண்டகாலதத்துவம் (உபாயம்) சிரேஷ்டமாகக் கருதப்படுகிறது. ஸெப்டம்பர் மாதத்தில் எதிரிகளின் படையெடுப்பானது உன்னத நிலைமையை அடைந்து 'சானல்' துறைமுகங்கள் மிகவும் மும்மரமாகத் தாக்கப்பட்டபொழுது, நாம் ஜெர்மானியர்களின் தொழிற்சாலைகளையும், ரயில்மார்க்கங்களையும், யுத்த தளவாட களஞ்சியங்களையும், பின்னும் பெர்லினும் அதற்குக் கீழ்ப்பிரதேசங்களையும் தாக்கியது நம் ராஜீய ஆகாயப்படையின் பல அபிவிருத்தியைக் குறிக்கிறது.

ஸெப்டம்பர்மாத முடிவிலிருந்து ஜெர்மனியிலுள்ள லக்கியங்களைக் குண்டுவீச்சு மூலம் தாக்கும் இந்த நீண்டகால உபாயமே நம்முடைய காரியங்களில் முக்கிய மானதாகயிருக்கிறது. ஸெப்டம்பர் மாதத்தில் ஜெர்மனியில் 82 இடங்கள் 198 தடவைகளும், அக்டோபர் மாதத்தில் 86 இடங்கள் 255 தடவைகளும் தாக்கப் பட்டன. மேலே சொன்ன எண்ணிக்கைகளில் ஒவ்வொரு இடத்தையும் உத்தியோக அறிக்கையில் வெளியிட்டிருக்கிறபடி ஒரு லக்கியமாகக் கருதுவது நம்முடைய எதிர்ப்பின் முழு அளவையும் காட்டாது. ஏனென்றால் பிற்கால படையெடுப்பு ஒவ்வொன்றிலும் பெர்லின், ஹாம்பர்க், கோலோன் போன்ற இடங்களில் நான்கு அல்லது ஐந்துவகை லக்கியங்கள் தாக்கப்பட்டு வந்திருக் கின்றன.

"இறுதியில் தளரச்செய்வது" என்ற உபாயத்தின் விஸ்தரிப்பில் மூன்று வகைகள், பிரதானமாக (யுத்த முஸ்தீப் உற்பத்திசாலையும், ஆகாய விமான உற்பத்திசாலையும் நீங்கலாக) இருக்கின்றன. இவைகளிலிரண்டு ஏற்கனவே ஜெர்மனியிலுள்ள சண்டை சிக்கனம் என்ற குறைவைப்பற்றியதாகும். கடைசியாகச் சொல்லப்பட்ட இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதாக இருக்கின்றது. அவைகள் (1) எண்ணெய் கிட்டங்கி, எண்ணெய் சுத்திசெய்யும் யந்திரங்களும் எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகளும் (2) உள்நாட்டு போக்குவரத்துகள்—ரயில், வாய்க்கால்கள், தரைமார்க்கம். மூன்றுவது வகை லக்ஷியமான ஜெர்மனியின் கப்பல் துறைமுகம், கப்பல் பண்டகசாலை இவைகள் சம்பந்தப்பட்ட மட்டில் நம்முடைய காரியங்கள் தற்காலத்தில் தாக்குவதும் ரக்ஷித்துக் கொள்வதுமாகயிருக்கின்றது.

சென்ற இரண்டு மாதகாலத்தில் ஒரு இரவாவது ஜெர்மானியர்களுடைய எண்ணெய்க் கிடங்குகளைத் தாக்காமல் கழிக்கப்படவில்லை. மூன்று பெரிய எண்ணெய் உற்பத்திசாலைகள் அதாவது லூனாவிலுள்ளதும், ஸ்டெடின் பக்கத்தில் உள்ள கெல்ஸன்கர்ச்சன் பாலிட்ஸிலுள்ளதும், ஹாம்பர்க்கில் ரினேனியா அஸாக் சுத்தி செய்யும் ஸ்தலங்கள் எண்ணெய்க் குளங்கள் இவைகள் விடாமுயற்சியுடன் ஓயாமல் தாக்கப்பட்டு வருகின்றது. சென்ற அக்டோபர் நவம்பர் மாதங்களில் கெல்ஸன்கர்ச்சனிலும், ஹாம்பர்க்கிலும் உள்ள எண்ணெய்க் கிடங்குகள் பதினுன்குதரம் தாக்கப்பட்டன. லூனா ஏழுதரமும், பாலிடஸ் நான்குதரமும் தாக்கப்பட்டன. ஜெர்மனியின் மற்ற பாகங்களிலுள்ள, எண்ணெய் உற்பத்திசாலைகள் கிடங்குகள் சுமார் இருபது ஸ்தலங்களும் கிரமமாகத் தாக்கப்பட்டு வருகிறது. ஜெர்மனியில் நிலக்கரியிலிருந்து எண்ணெய் உற்பத்திசெய்யும் வழி மிகவும் விருத்தியடைந்து இருக்கிறது. ஆனால் அதின் முறைகள் சிக்கலாகவும் நுட்பமாகவுமிருப்பதுடன், அதின் கலப்பு ஜலவாயுசாதன சாலைகள் தாக்குவதற்குச் சுலபமான குறிகளாகின்றன.

கீழ்பிரதேசங்களைப் படையெடுத்த காலமுதல் வர்த்தகப் போக்குவரத்து தாக்கப்பட்டு வருகின்றது. இப்பால் ஜெர்மனிக்குள் உட்புகுந்தே எதிர்க்கப்படுகிறது. பெர்லினில் முக்கியமாய் ரயில் பாதைகளையே அடிக்கடி குறிவைத்து அடிக்கப்படுகிறது. ஜெர்மனியின் ரயில்பாதைகள் முஸ்தீப் குறைவாயுள்ளதென்பது தெரிந்ததே. ராஜீய ஆகாயப்படை (R. A. F.)யின் கையில் அகப்படாமலிருக்கப் பிரயத்தனப்படுவதில் யுத்த தொழிற்சாலைகளைக் கிழக்கே நகர்த்தும் சிரமமான பாரத்தை அதிகப்படுத்தியது. ஆகவே தலைநகரின் பெரிய எல்லை ஸ்தலங்களையும், சாமான் வண்டிசாலைகளையும் இவைகளைப்போன்ற முக்கிய ஸ்தானங்களைப் பிடிவாதமாகத் தாக்கவேண்டிய அவசியமேற்படுகிறது. இதுபோலவே, மத்திய ஜெர்மனியிலுள்ள ஹேல், நார்டுஹாஸன் முதலிய இடங்கள் தாக்கப்படுவது கீழ்மேற்கு வர்த்தக முறைக்கு கேந்திர ஸ்தானமாகயிருப்பதாலேயாகும்.

முக்கிய அம்சத்தில் ரயில் பாதைகளுக்கு இரண்டாவதாகத்தான் நதிகளும் கால்வாய்களும் ஆகும். இவைகளில் முக்கியமாய் ரைன் (Rhine) நதிக்கரை துறைமுகங்கள். சென்ற நவம்பர் மாதம் 20-ம் தேதி டியேஸ்பர்க்கு நதி துறை முகம் நமது ராஜீய விமானப்படையால் சமீபத்தில் விருத்தி செய்திருக்கும் விதமாக மிகவும் தீவிரமாய்த் தாக்கப்பட்டது. இதில் ஒரு இடம் ஒரு ராத்திரி பூராவும் குறிப்பாக அடிக்கப்பட்டது.

மாரிகாலத்தில் ராத்திரி தாக்குதல் மிதமானதே. ஆனால் ஒரு காலத்திலும் நிறுத்தப்படுவதில்லை. அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஜெர்மனியின்பேரில் 61 ராத்திரிக்கு 51 ராத்திரி தாக்குதல் ஏற்பட்டது.

---

## பிரான்ஸில் மூன்றுவகை மனப்பான்மை.

## மேற்குப் பாலைவனங்களில் யுத்தம் பிரெஞ்சு ஜனங்கள் மனதை எவ்வாறு திருப்புகிறது.

## பிரான்ஸைக் காப்பாற்ற பெடேனின் முயற்சி.

## புது ரேடியோக்கள் வாங்குவதின் அர்த்தம்.

(வேர்னன் பார்ட்லெட் "நியூஸ் கிரானிகிள்" பத்திரிகையில் எழுதுகிறார்),

ஆபிரிக்காவின் மேற்குப் பாலைவனங்களில் நடக்கும் யுத்தங்கள், பிரான்ஸை யும், சில வயது முதிர்ந்த ஸிவில், ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஜெர்மனிக்குப் பணியும் கொள்கையை முற்றுவிக்கப்பார்க்கும் ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு காலனிகளையும், ரொம்ப பாதிக்கும் என்று தோன்றுகிறது.

நான் விச்சியிலிருந்து சில வாரங்களுக்கு முன்புதான் வந்த சில நடுநிலைமைக் காரர்களைச் சந்தித்தேன். ஸெப்டம்பர் ஆரம்பம் முதல் பிரான்ஸின் மனப் பான்மை பிரிடிஷாருக்கு அனுகூலமாக வளர்ந்துவருகிறதென்று அவர்கள் பல மாகச் சொன்னார்கள்.

அவர்கள் அபிப்பிராயம் :—பிரிடனுக்கு விரோதமாக எந்த பிரெஞ்சு கவர்ன் மெண்டும் ஜெர்மனியுடன் ஒத்துழைக்கமுடியாது, அப்படி முயற்சித்தால் பிரான் ஸில் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் கவர்ன்மெண்டின் உத்தரவுகளைப் புறக்கணித்து அவைகளை அமுலுக்கு கொண்டுவர மறுக்கும்படிநேரும், என்பது.

ஹிட்லரைக் காட்டிலும் முஸோலினியிடம் வெறுப்பு ஜாஸ்தி. பிரிடிஷாரிடம் அவன் அடைந்த தோல்வி அவர்கள் முற்றிலும் ஜயிக்கவேண்டுமென்ற ஆசையை தூண்டிவிட்டிருக்கிறது.

பிரான்ஸ் கீழே விழுந்தபொழுது ஜெனரல் டிகாலின் பெயரே ரொம்ப பிரெஞ்சுக்காரருக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுதோ லண்டனிலிருந்து ஒலிப் பரப்பின்மூலம் அவரைக் கேட்கும் லக்ஷக்கணக்கானவர்கள் அவர் ஓர் சூரர்

என்று கொண்டாடுகிறார்கள். எகிப்தில் நடக்கும் யுத்தத்தில் அவருடைய கூட்டாளிகள் பலர் ஒத்துழைத்து பங்கெடுத்துக்கொள்வது அரசியல் ரீதியாக மிகவும் முக்கியமான ஒரு சம்பவம்.

விச்சியில் மூன்றுவித மனப்போக்குகள் இருந்துவருவதாகத் தெரிகிறது. லவாலுக்கும், டார்லானுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை—ஹிட்லரின் பிடியாளாக யார் இருப்பது என்பதில் பந்தயம் போடுகிறார்கள். ஆனால் சீக்கிரத்தில் சமாதானம் ஏற்படும் என்று எதிர்பார்த்த லவால், அந்த நம்பிக்கையை இழந்து, தான் அதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை முடிந்தால் வாபஸ் வாங்கத் தயாரென்று தெரிகிறது. கடற்படை மந்திரி அட்மிரல் டார்லான் பிரிடனின் கங்கணங்கட்டிய விரோதி. ஆனால் டாராண்டோ சம்பவம் முதல் கடற்படையில் அவனைக்கண்டால் பிடிக்கவில்லை.

காஸ்டன் பெரேரி என்பவர் பழய பிரதம மந்திரி ஹெர்ரியோவின் செக்ரடரியாயிருந்தவர். லண்டனில் முன்பு சோவியத் ஸ்தானிகராக இருந்த கிராஸினின் மகளை மணந்திருக்கிறார். இந்த சிறிய கோஷ்டிக்கு தன் எண்ணங்களைப்பரவி இயக்கும் சக்தி அவர்தான் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ரெயிஷ்ஸ்டாக் அக்னிபாதை விசாரணையைப்பற்றி சர்வ தேசத்தார்களும் செய்த ஆக்ஷேபணையில் அவர் முகான்மையானவர்.

இரண்டாவது கோஷ்டியில் மார்ஷல் பெடேன் இருக்கிறார். ஜெர்மனிக்கு வான் ஹின்டன்பர்க் எப்படியோ அப்படி பிரான்ஸுக்கு தான் என்று அவர் தன்னைத்தானே கருதுகிறார். தன் தேசத்துக்குச் சேவை செய்யவேணுமென்ற எண்ணம் அவருக்கு உண்டு. தற்போது அது ஜெர்மானியர்களின் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டால்தான் சாத்தியமென்று அவர் நம்புகிறார். விச்சியிலிருந்து என்னை சந்தித்த இரு நடுநிலைமைக்காரர்களுக்கும் மார்ஷல் பெடேனை நன்றாகத் தெரியும். பிரிடன் எதிர்த்து நிற்பதால் பிரான்ஸும் தன் சுயேச்சையைப் பெறலாம் என்ற ஆசையால் பாதி; கண்யமான மனிதர் ஒப்புக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளை ஜெர்மனியிடம் பெறலாம் என்பதற்கு யாதொரு அறிகுறியும் கிடைக்காததால் பாதி; மார்ஷல் பெடேன் லவாலிடமிருந்து பிரிந்து அவரிடம் நம்பிக்கை இழந்துவிட்டார் என்று என்னை சந்தித்த இருவர்களும் நம்புகிறார்கள். (இக்கட்டுரை எழுதியது லவாலை பெடேன் வேலையை விட்டு நீக்கும்முன்.) பெடேனின் மந்திரி சபையில் அநேக அநாமதேய மந்திரிகளும் இருக்கிறார்கள்.

மூன்றாவது வகுப்பிலிருப்பவர்கள், பிரெஞ்சு சுயேச்சை இயக்கத்தில் தைர்யமாகச் சேர்ந்த தங்கள் தேசத்தார்களின் போராட்டத்திலிருந்து தங்கள் நாட்டின் கதிமோட்சத்தை எதிர்பார்ப்பவர்கள். இவர்களில் அநேகர் ஜெர்மனி தோல்வியடையும் என்றும், ஹிட்லரை தோற்கடிப்பதில் தங்கள் நாட்டினர் ஜாஸ்தி ஊக்கம் எடுத்துக்கொண்டாலொழிய சமாதான உடன்படிக்கையை நிர்த்தாரணம் செய்வதில் பிரான்ஸுக்கு யாதொரு அதிகாரமும் இருக்காது என்றும் நம்புகிறார்கள். அவர்களுக்கு பிரெஞ்சு சுயேச்சை இயக்கத்தில் இருக்கும் அக்கரை அளவற்றது. அது சம்பந்தமாக லண்டனிலிருந்து செய்யப்படும் ஒலிப்பரப்புகளைக் கேட்க என்ன அபாயங்களையும் மீற அவர்கள் தயார்.

தென் பிரான்ஸிலிருந்து எனக்கு வந்த ஒரு சொந்தத் தபாலில், எவ்வளவு பணங்கொடுக்கத் தயாராக இருந்தாலும் ரேடியோ பெட்டி கிடைப்பது அரிது என்று அறிவிக்கப்படுகிறது. ரேடியோ பெட்டி வாங்குவது விச்சியிலிருந்து வெளியிடும் உத்தியோக அறிக்கைகளைக் கேட்கவா? மற்றொன்று குறிக்கத்தக்க விஷயம்—முன்பு பிரிட்னுக்கு விரோதமாக இருந்த அநேக பத்திரிகைகள், முறைப்படி, அவைகளை பதிப்பிக்கின்றன; ஆனால் பிரிட்னுக்கு விரோதமான யாதொரு சொந்த அபிப்பிராயத்தையும் வெளியிடுகிறதில்லை.

எனக்குத் தகவல் அளித்தவர்களின் முடிவான அபிப்பிராயம் இதுதான்—பிரெஞ்சு கடற்படையையோ பிரெஞ்சு காலனிகளையோ நேச நாட்டாரைத் தோற்கடிப்பதற்காக உபயோகிக்கும்படி அனுமதிக்க எந்த பிரெஞ்சு கவர்ன்மெண்டாலும் முடியாது.

---

## கதம்பம்.

---

1. "ஒருவராலும் தடுக்கப்படாதவண்ணம் அடால்ப் ஹிட்லர் உலகத்திற்கே தலைமை வகிக்கப்போகிறார்." (டாக்டர் பிரான்க், போலந்து கவர்னர், டிஸம்பர் 22).

2. "பிரிடிஷ் மக்கள் இந்தியாவிற்கு பூர்ணமான ராஜீய சுயேச்சையை அளிக்க தீவிரமாய் நிச்சயித்திருக்கிறார்கள்." (ஒன்பது பிரிடிஷ் பார்லிமெண்டு மெம்பர்கள், டிஸம்பர் 23).

3. "பிரிடிஷ் தேசத்தார் இந்திய தேசத்திற்கு விடுக்கும் அறிக்கை என்ன என்றால்: 'ஹிட்லர் தத்துவத்தை ஒழிக்க எங்களுடன் சேர்ந்துகொள்ளுங்கள். சமாதான உடன்படிக்கையின் வாசகங்களை நிர்ணயிப்பதிலும் உலக நடையை ஒரு வழிப்படுத்துவதிலும் எங்களுடன் கலந்துகொள்ளுங்கள்.'" (ஒன்பது பிரிடிஷ் பார்லிமெண்டு மெம்பர்கள், டிஸம்பர் 23).

4. "பழைய ரோமாபுரியில் இருந்த சக்கிரவர்த்திகளால் ஆளப்பட்ட புகழ் பெற்ற தேசமாகிய இதாலியை, பயங்கரமானவும், தெய்வபக்தியில்லாதவும், காட்டுமிராண்டித்தனமுள்ளவர்களுமான நாஸிகள் கக்ஷியில் சேர்ந்து சண்டை செய்யும்படி செய்ததற்கு முஸோலினி ஒருவர்தான் காரணம்." (மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், லண்டன், டிஸம்பர் 24).

5. "இதாலிக்கு இப்பொழுது எவ்வளவு கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தினுடைய பூர்ணமான எதிர்ப்பையும் அனுபவிக்கவேண்டி இருக்கிறது. அல்லது பிரென்னர் கணவாய்க்கப்பாலிருக்கும் ஹூண ஜாதிக்கு ராஜாவான ஆட்டில்லாவுக்கு சமானமான ஹிட்லரின் உதவியைத் தேடவேண்டியிருக்கிறது." (மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், லண்டன் 24).

6. "இந்தக்கஷ்டங்களினின்றும் நமக்குள் ஒத்துழைப்பு அதிகரித்திருக்கிறது. மேற்படி ஒத்துழைப்பை தொடர்ச்சியாக கடைசிவரையில் கைக்கொண்டு கஷ்டங்களை சகித்துக்கொள்ளுவோமாகில் நமக்கு வெற்றி நிச்சயம்." (மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தி, டிஸம்பர் 25).

7. "சீதோஷ்ண பரிமாணமளக்கும் கருவியைக்கொண்டு ஜெர்மனியின் மனோதைரியத்தையும் பிரிடிஷாரின் மனோதைரியத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால் ஜெர்மானியர்கள் 45 டிகிரியிலும் பிரிடிஷார் 85 டிகிரியிலும் இருப்பதாகக் காணப்படுவார்கள்." (அமெரிக்கன் பேபரைச்சேர்ந்த மிஸ்டர் N. இர்வின், டிஸம்பர் கடைசியில்).

8. "கான்யூட் என்பவர் சமுத்திரத்தின் அலைகளைப் பின்னால் போகும்படி சொல்லி முடியாமல் போனதுபோல், ஸௌதாம்டனிலுள்ள ஜனங்களின் ஊக்கத்தை ஜெர்மானியர்கள் ஒருபொழுதும் அழித்துவிடமுடியாது. இது மேன்மேலும் விருத்தி அடையும். கப்பல்களிலுள்ள பெரிய சங்குகளின் தொனிகள் தெருக்களில் மறுபடியும் எதிரொலி பரப்பும். அமெரிக்கா தேசத்திலிருந்துவரும் புது சைன்யங்கள் மேலே சொல்லிய இடத்திற்கு வரும்பொழுது, சாமான்யமான மனிதர்களும் ஸ்திரீகளும் சுயேச்சைக்காக இங்கு உயிர் துறந்தார்களென்று எண்ணி மிகவும் பக்தியுடன் நடந்துகொள்ளுவார்கள்." (அமெரிக்கன் பேபரைச் சேர்ந்த மிஸ்டர் N. இர்வின், டிஸம்பர் கடைசியில்).

9. "நாஸிகள் உலகத்தில் தாங்கள் ஒரு புதிய ஏற்பாடு செய்யப்போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய அபிப்பிராயம் என்னவென்றால்:—முன்காலத்திலிருந்த சகிக்கமுடியாத கொடுங்கோலும், சுயேச்சையின்மையும், மதமின்மையும், ஜனங்களின் சீர்கேடும்தான்." (பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், டிஸம்பர் 29).

10. "வலுவில் சண்டைக்குப்போனவர்கள் சமாதானத்திற்கு அழைத்தாலொழிய சமாதான வழியிலிறங்கும்படி தூண்ட ஐக்கியநாடுகளுக்கு அதிகாரம் இல்லை." (பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், டிஸம்பர் 29).

11. "அச்சு வல்லரசர்கள் இந்த யுத்தத்தில் வெற்றியடையமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்." (பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், டிஸம்பர் 29).

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ஜெர்மனியின் கிறிஸ்மஸ் வாழ்த்து.

கிருஸ்மஸ் பண்டிகையென்று சும்மாயிராமல் பாபிகளான பிரிடிஷ் விமானிகள் அன்று பார்த்து ஜெர்மனிமேலும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகள் மேலும் குண்டுகளைப் போட்டு விட்டதாயும், ஆனால் ஜெர்மனியோ கடவுளுக்குப் பயந்து அன்றுதினம் பிரிடன்மேல் விமானப்படை யெடுக்கவில்லை யென்றும்,

பெரிய கிறிஸ்து பக்தர்போல் நடித்துக்கொண்டு டாக்டர் கோயபல்ஸ் ஒலிபரப்பி யிருக்கிறார். உண்மையில் 24, 25-தேதிகளில் பிரிடிஷ் விமானங்கள் மேற்சொன்ன படி படையெடுக்கவேயில்லை. ஆனால் ஜெர்மானியரைப்போல் பேடிஜ பக்தியை பிரிடிஷார் செய்யமாட்டார்கள். மழை, பனி, இருள் ஆகிய முக்கிய காரணங்க ளால் அன்று படையெடுக்கவில்லையென்று சொல்லிவிட்டார்கள்.

டாக்டர் கோயபல்ஸின் பக்தி வக்கிரபக்தியென்று எவருக்கும் தெரிந்தது தான். இவர் 1936 மார்ச்சு மாதத்தில் ஜெர்மானியருக்குக் கடவுளிடம் சிபார்சு செய்ய மத்தியில் ஹிட்லர் பிறந்திருக்கிறாரென்றும், பிறகு, ஸாயர் பிரக்னர் லாண்ஸீடங் என்ற பத்திரிகை வாயிலாக, ஏசுநாதரை விட ஹிட்லர் நவீனமான, மகத்தான அதிக சக்தியுள்ள அவதாரமென்றும் சொல்லியிருக்கிறார்.

## தொழிலாளிகளுக்கு விரோதமாக.

டிஸம்பர் 26-ம் தேதிக்கு பாக்ஸிங்-டேயென்று பெயர். இது, பொதுவாக தொழிலாளர்களுக்கு விடுமுறை நாளாகும். ஆனால் இந்த வருஷம் யுத்தத்தை முன்னிட்டு பிரிடனில், தொழிலாளர்கள் தாங்களாகவே சம்மதித்து, மனமுவந்து விடுமுறை யெடுத்துக்கொள்ளாது, அன்றும் வேலை செய்தார்கள். இதை ஏதோ பெரிய அக்கிரமம்போலும், கலகம்போலும் வர்ணித்து, பிரிடிஷ் தொழிலாளர் சங்கத்துக்கே அழிவு வந்து விட்டதாகப் பலவிதமான வசைகளை ஆயிரக்கணக்கான வார்த்தைகள் பிரயோகம் செய்து ஜெர்மன் ரேடியோ யந்திரம் அரைத்துத் தள்ளியிருக்கிறது.

பொதுஜன ஸமூகத்திலேயே தொழிலாளர்கள் முக்கிய அங்கத்தினரென்று கருதக்கூடாது. அவர்களுக்கு வேண்டியது சோறும், விளையாட்டும்தான் என்று 1930-லேயே ஹிட்லர் சொல்லியிருக்கிறார். பாக்ஸிங்-டேயில்கூட பிரிடிஷ் தொழிலாளிகள் வேலை செய்ததற்குக் காரணம் ஹிட்லரைத் தொலைக்கத்தான்; இந்தக் காரியம்முடிகிற வரையில் அவர்கள் சும்மாயிருக்கப்போவதில்லை.

## ஹா-ஹா புளுகுக்களஞ்சியம்.

பிரிடிஷ் ஸ்தானீக உத்தியோகஸ்தர் (attaché) ஒருவர் ஸ்டாக்ஹோமுக்கு, ஜெர்மன் முற்றுகையால் நேரே போகமுடியாது சுற்றுப்பாதையாய், கேப்-டவுன், டர்பான், கைரோ, மாஸ்கோ மார்க்கமாய்ப் போக நேரிட்டு விட்டதாக ஹா-ஹா தடித்தனமாய்ப் பரிகசித்து ஒலிபரப்பியிருக்கிறார். இவ்விடங்களுக்குப் பிரிடிஷ் மக்கள் போகலாமென்று சொன்னதிலிருந்தே உலகமெங்கும் தடையின்றி அவர்கள் சஞ்சரிக்கமுடியுமென்று ருஜுவாய் விட்டது. ஜெர்மனிக்கு இது சாத்திய மில்லை. மாஸ்கோவுக்குமவர்கள் வேண்டுமானால் போவார்கள். 50 நீர்மூழ்கிகளை அமெரிக்காவிலிருந்து பிரிடன் வாங்கினதிலிருந்து ஜெர்மனிக்கு அளவில்லாத கோபம். அமெரிக்கா, பரோபகாரத்தோடு, சும்மா கொடுத்துவிடவில்லையென்றும், யுனைடட் ஸ்டேட்ஸின் உதவியால் பிரிடன் ஜயிக்க முடியாதென்றும் ஹா-ஹா ஏளனம் செய்து ஒலிபரப்பியிருக்கிறார். இதற்குப்பதில் ரூஸ்வெல்டானவர் டிஸம்பர் 30-ல் ஹிட்லரைக்கண்டித்துப் பேசியதேபோதும்.

## ஏட்ரியாடிக் கடலில் தோல்வியும், அதைப்பற்றி அச்சு நாடுகள் செய்யும் பிரசாரமும்.

டிஸம்பர் 24-ம் தேதி பெர்லின் அறிக்கைப்படி சிறு கிரேக்கியக்கப்பல்களால் வலோனு துறைமுகம் தகர்க்கப்பட்டதாக வெளி வந்திருக்கும் பிரிடிஷ் அறிக்கை பொய்யென்று இதாலி சொல்லிவிட்டதாம். ஆனால் உண்மையில் இதாலிக் கப்பல்கள்தான் அயோனியா கடற்கரையில் கிரேக்கியர்கள் வைத்திருக்கும் பீரங்கிகளைத் தாக்கிவிட்டனவாம்.

பிரிடிஷ் யுத்தக்கப்பல்களும், குரூஸர்களும், நாசகாரிகளும் வலோனுவைத் தகர்த்து, ஏடிரியாடிக்கடலை சோதனை போட்டபோது ஏன் இதாலியக்கப்பல்கள் வெளிவரவில்லையென்று ஹிட்லர் முஸோலினியைக் கேட்டிருக்கவேண்டும். அதற்கு என்ன சொல்லுவதென்று தெரியாது முஸோலினி மேற்சொன்ன வார்த்தைகளை உளறியிருக்கவேண்டும்.

ஜர்னல்-டி-இதாலியாவென்ற இதாலியப் பத்திரிகையானது மேற்குப் பாலைவனத்து யுத்தத்தை தேச சரித்திரத்தில் குடியேற்ற நாட்டுச் சண்டைகளுக்குள் முதல்தரமானதென்று ஒப்புக்கொண்டிருக்க, ஜெர்மனி அதை மறைத்து யுத்தக் கைதிகள் வெகுவாய் இதாலியர்களல்லாது கீழ் ஜாதிகளென்றும், அவர்களில் பலர், பிரிடிஷ் சைன்யம் தடைபடாதிருப்பதற்காக ரஸ்தாக்களில் பிடிக்கப் பட்டவர்களென்றும் சொல்லுகிறது.

என்ன பொய்! கைரோவிலிருக்கும் பிரிடிஷ் சைன்யத்தின் தலை ஆபீஸின் டிஸம்பர் 28 அறிக்கைப்படி இதுவரையில் பிடிபட்ட கைதிகள் 38,114 பேர்கள். இவர்களில் இதாலியர்கள் 24,845 பேர்கள். இதில் உத்தியோகஸ்தர்களுமுண்டு. ஜெர்மனி 20,000 பேர்களை மறைத்துக் கணக்குக் கொடுக்குமேயொழிய அவர்களைத் தப்பிவிக்க முடியாது.

## B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### இதாலியின் அலங்கார வார்த்தைகள்.

இந்த வாரத்தில் இதாலியானது ஏராளமாக கௌரவமில்லாத வார்த்தைகளை ஒலிபரப்பில் உபயோகப்படுத்தியிருக்கிறது. 'போக்கிரி, விபசாரியின் மகன், கெஞ்சிக் கூத்தாடும் நாய்' என்றும், இவர்களுக்கு நரகப் பிராப்தியென்றும் பல விதமாகப் பல கக்ஷியார்களையும், சமூகத்தார்களையும் வைதிருக்கிறது. இந்தியர்களைப்பற்றிப் பேசுகையில் அவர்களை 'கழுதைகளே' யென்று அழைத்திருக்கிறது.

### ஜெர்மனியில் வீடுகள் அவஸரமாகக் கட்டுவானேன்?

இந்த வாரத்தில் ஜெர்மனிக்குப் பிரசாரம் செய்யச் சமாசாரம் ஒன்றுமில்லாததால் லண்டனில் ஏற்பட்டிருக்கும் பழுதுகளைப்பார்க்க வேலைக்காரர்கள் நியமிக்கப் பட்டிருப்பதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறது. பழுதுபார்ப்பதில் என்ன பிசகு என்று தெரியவில்லை? பிசகென்றால் ஹிட்லர் ஏன் நவம்பர் 15-ம் தேதியன்று

வருஷமுடிவடைவதற்குள் துரிதமாக 300 வீடுகள் கட்டியாகவேண்டுமென்று தொழிற்சங்கத்தலைவரான டாக்டர் லேயுக்கு உத்தரவு அனுப்பினர்? இந்த உத்தரவில் யுத்தம் முடிந்த பிறகு தொழிலாளர்கள் தொகுதி அதிகப்பட்டிருக்கும் என்றும், அவர்கள் ஆரோக்கிய திடகாத்திரராய், குடும்ப அபிவிருத்தியாவதற்கு நல்ல வாசஸ்தலங்கள் அவசியமென்றும், ஆகவே ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படவேண்டுமென்றும் சேர்த்துச் சொன்ன காரணமென்ன?

அவசரமாக வருஷம் முடிவதற்குள், அதாவது நவம்பர் 15-ம் தேதியிலிருந்து 45 நாட்களுக்குள்ளாக 300 வீடுகளைக் கட்டச் சொன்னதற்குக் காரணம் பிரிடிஷ் விமானப்படையெடுப்புத்தான். எஸ்ஸன் (குருப்ஸ்), கெல்ஸன் கெர்ஷன். லியூனு (எண்ணெய் உற்பத்திச்சாலை) முதலிய இடங்களில் தொழிற்சாலைகளும், வாசஸ்தலங்களும் கலந்து கட்டப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகளை பிரிடிஷ் விமானங்கள் தகர்த்தபோது வீடுகளுமிடிந்துபோயின. இதற்காகப் புதிதாக 300 வீடுகள் கட்ட உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஏதோ, பிற்காலத்தில் ஜனத்தொகை அதிகப்படுமென்பதற்காக இப்பொழுது இந்த அவஸர உத்தரவு போடப்படவில்லை.

## முடிவுச் செய்தி.

அமெரிக்காவுக்குப் போயிருந்த பிரிடிஷ் ஸப்ளை இலாகா மந்திரி சமீபத்தில் திரும்பிவந்து, அமெரிக்காவிலிருந்து உதவியை எதிர்பார்க்கக் கூடாதென்றும், அமெரிக்கா உதவிசெய்ய முடியாதென்றும், சொன்னதாக டிஸம்பர் 27-ல் ஜெர்மனி பொய்யாக ஒலிபரப்பியிருக்கிறது.

பிரிடிஷ் ஸப்ளை இலாகா மந்திரி அமெரிக்காவுக்குப் போகவேயில்லை. இலாகா சார்பாக, பெயர்போன பொருளாதார-சாஸ்திர-நிபுணரான வால்டர் லெய்டன் அமெரிக்காவுக்குப்போய் சமீபத்தில் திரும்பிவந்து அமெரிக்கா, பிரிடனுக்காக யுத்த தளவாடங்களை விரைவாய்த் தயாரிப்பதால் பிரிடனுக்கு வெற்றி நிச்சயமாயேற்படுமென்ருர்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXVI.

1941—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜனவரி 11, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 16, | வியாழக்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.25 |
| | | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | | புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம். | ,, | 5.30 |
| | | கரம்பக்குடி ... | ,, | 5.30 |
| | | ஒடையாளிப்பட்டி ... | ,, | 5.30 |
| | | அன்னவாசல் ... | ,, | 5.30 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 5.30 |
| 17, | வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | அரிமளம் ... | மாலை | 5.00 |
| | | குழிபிரை ... | ,, | 5.30 |
| | | கொப்பனுபட்டி ... | ,, | 5.30 |
| | | குடுமியாமலை ... | ,, | 5.30 |

## பிரஸங்கம் XXVII.

| | | | | |
|---|---|---|---|---|
| 18, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 19, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலூர் ... | காலை | 9.45 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| 20, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.25 |
| | | ஆலங்குடி ... | மாலை | 5.30 |
| | | ராங்கியம் ... | ,, | 5.30 |
| 21, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.25 |
| | | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5 30 |
| | | பெருங்களூர் ... | ,, | 5.30 |
| | | விராலிமலை ... | ,, | 5.30 |
| | | பொன்னமராவதி ... | ,, | 5.30 |
| 23, | வியாழக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் ... | ,, | 5.30 |
| | | கோனுபட்டு ... | ,, | 5.30 |
| 24, | வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |

# இந்தியாவின் பாதுகாப்புக்கு உதவுங்கள்

## பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளை தவருமல் வாங்குங்கள்.

---

ஒரே சமயம் 10 ரூபாய் கொடுத்து பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டை வாங்க முடியாதவர்களுக்கு இந்தியா கவர்ன்மென்டார் ரூ. 1, அ. 8, 4 விலை பெருமான பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளையும், கார்டுகளையும் வெளியிட்டிருக்கின்றனர். கார்டுகளில் இந்தவிதமான ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு இடம் விடப்பட்டிருக்கிறது. 10 ரூபாய் விலை பெருமான ஸ்டாம்புகளை சேர்த்த பிறகு போஸ்டாபீசுக்கு கார்டை எடுத்துக்கொண்டு போய் பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுக்காக கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.

இந்த விதமான ஸ்டாம்புகளும், கார்டுகளும் சேமிப்பு நிதியை வைத்திருக்கும் எந்த தபாலாபீசிலும் கிடைக்கும்.

பாதுகாப்பு சேமிப்பு கார்டுள்ள ஒவ்வொருவரும் தம் பெயரையும், விலாசத்தையும் கையொப்பம் அல்லது பெருவிரல் குறியையும் ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கு முன்பு கார்டின்மேல் எழுதவேண்டும். சர்டிபிகேட்டையுடையவர் பாதுகாப்புக்காக இந்த எச்சரிக்கை அவசியம்.

**பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுகள் ரூ. 10, 50, 100, 500 வரையில் கிடைக்கும். 10 வருடங்களின் கடைசியில் 100க்கு $3\frac{1}{4}$ ரூபாய் வீதம் வட்டிக்கு வட்டியாக வருமான வரி இல்லாமல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ரூ. 13-9-0 ஆக கிடைக்கும். எந்த வழியிலும் சேமிப்பு தொகை குறையாது. ஒவ்வொருவரும் 5000 ரூபாய் வரையில் போடலாம். அருகாமையிலிருக்கும் தபாலாபீசில் விசாரிக்கவும்.**

யுத்த சேமிப்பு இயக்கத்தாரால் வெளியிடப்பட்டது.
தபால் பெட்டி 11, சென்னை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—11-1-41.